உ

சிவமயம்.

அருட்பெருஞ்சோதி தெய்வந்துணை.

திருவருட் பிரகாசவள்ளலா ரென்னும்

# ஸ்ரீமத், இராமலிங்கசுவாமிகள் விஷயமாக

ழநாட்டு

# நா. கதிரைவேற் பிள்ளையைப்பற்றி

# கோர்ட்டில் நடந்த விவகாரமும்,

முக்குணவயத்தின் முறைமறைந்தறைதல்

என்னும்

பத்திரிகையின்பேரில் கண்டனமும்,

சென்னை

ஸ்ரீ வேணுகான முத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1906

பிட்டனர். ஏனெனில் தன்பெயரால் வெளியிடாது தமதுமா ணாக்கரின்பெயரால்வெளியிடுவானேனெனில், குரங்கானதுஓர் வாய் குவிந்த பாத்திரத்திலுள்ள தின்பண்டங்களை எடுக்கத் துணியாது, தன் குட்டியின் கையைப்பிடித்து அதில் நுழைய விடும்; குட்டி கீச்சென்றால் இது ஒட்டம்பிடிக்கும், ஏதேனுந் தின்பண்டமிருந்து குட்டி தின்றால் தானுந் தன்கையை நுழை த்து அகப்பட்டவரையில் தின்றுகளிக்கும். அதுபோல கதிரை யார் தமது மாணாக்கர் பெயரால் வெளிபிட்டால், ஏதேனுந் தீங்குநேர்ந்தால் அவர்தலையோடே ஒழிந்து போகட்டுமென்ப தே யிவர் கருத்தாம். இதுநிற்க"

மேற்படி அவலச்சுவடியைக் கண்ட உண்மைச் சிவநேயச் செல்வர்கள் சிவனடியார்களை இவ்வாறு தூஷிக்கும் பாதகர்க ளும் உலகிலுண்டோவென மனம்புழுங்கி வருந்தினர். அவர்க ளுள், சுவாமிகளின் தமையன்பிள்ளையாகிய புராணீகர் பிரசங்க ரத்னாகரம் வடிவேலுபிள்ளை மனம் பொறாதவராய் அச் சுவடி யிற் பொதிந்திருக்கும் அனேககுற்றங்களுள் முக்கியமான 27 அவதூறுகுற்றங்களை எடுத்துக்காட்டிச் சென்னை பிரிசிடென்சி மாஜிஸ்திரெட்டுக்கோர்ட்டு 1904-ளு ததிய 24, 533-வது காலெ ண்டரில் மேற்படி நா. கதிரைவேற்பிள்ளை பு. பாலசுந்தர நா ய்க்கர் ஆகிய இவ்விருவர் பேரில் அவதூறு குற்றத்திற்காக வழக்கெடுத்தார்.

கோர்ட்டார் இதைப்பற்றி என்னசமாதானம் சொல்லப் போகிறீர்களென்று குற்றவாளிகளை விசாரித்தபோது, தாங்கள் அச்சிட்ட மருட்பாமறுப்பில் எழுதியவை யெல்லாம் இராம லிங்கப்பிள்ளைப் பாடல்களினின்றும், ஏனையோர் வெளியிட்ட பத்திரிகைகளி னின்றும், அவரவர்கள் சொன்ன வாய்மொழி களினின்றும் எடுத்தெழுதியவெனக்கூறினர்.

அங்ஙனமாயின் கோர்ட்டார் இராமலிங்கப்பிள்ளை பாடல களிலில்லாத அடியிற்கண்ட ஏழுகுற்றங்களை ருசுப்படுத்தவேண் டுமென உத்திரவு செய்தார்கள்.

அவ்வேழு குற்றங்களாவன.

1. இறுதியில் இராமலிங்கப்பிள்ளை தம்முடைய புளுகுக ளெல்லாம் கடவாமையால் அனேகர் வைதனர். அந்தஅவமா

னம் பொறுக்கமுடியாமல் தாமேதம்முயிரை மாய்த்துக் கொண்டனர்.

2. உலகாயதத்தில் முதிர்ந்து மகளிர் கூட்டமே இவர்க்கு இறுதிக்கூட்டமானமையால் இவர்மதமே உலகாயதமென்க.

3. இரெட்டிப் பாளையத்திலிருந்த ஒருபணக்காரரிடஞ்சென்று அவர்பகைவரைச் சூனியஞ்செய்து கொல்வதாக உறுதி கூறி ஆயிர ரூபா சவரன் வாங்கிய பிள்ளையா வள்ளலாவார்? வாங்கிய சிலநாளுள் பணங்கொடுத்தவர் இறந்தமையாலன்றோ இராமலிங்கரது வஞ்சகச்செய்கை மறைந்திருந்தது, அங்ஙனம் வழியிறவேறிய தங்கக்காசுகளை மடித்து, கடிதத்திற் சுருட்டிச் செம்புருக்குவோர்போல கம்மியரிடம் உருக்குவித்து பொன்னுருக்குகிறோமென்று விபூதியைத்தூவி, தம்மை இரசவாதியென்று பறையடிப்பித்துக் கபடநாடகக் கூத்தாடிய கருங்குழியாரா திருவருளைப் பிரகாசித்திடும் வள்ளல் அந்தோ! கொடுமை கொடுமை!

4. இராமனென்ற பெயரை இராமலிங்கம் எனவும், பின்னர் இராமலிங்கப்பிள்ளை, இராமலிங்க சுவாமிகள், இராமலிங்க வள்ளலார், திருவருட்பெருஞ்சித்த இராமலிங்கவள்ளல், திருவருட் பிரகாசவள்ளலார் எனப்பணிந்து சொல்லுவித்தனரே. இராமலிங்கப்பிள்ளை யென்று யாராவது கூறின், அவரைக் குருளையீன்ற ஞமலியே மானக் குலைத்துச் சினந்தனரே.

5. தஞ்சாவூர் ஜில்லா திருத்துறைப்பூண்டித் தாலூக்காவில் உள்ள ஒருசைவர் இறக்க, அவரை எழுப்பித்தருவேமென்று இராமலிங்கப்பிள்ளை சொன்னமையால், அவரதுமனைவிவடலூர் வெளிக்குக்கொண்டு சென்று புதைத்தாள்.

6. மஞ்சகுப்பங் கோர்ட்டில் இராமலிங்கப்பிள்ளை வந்து நான் நாவலரை நிந்திக்கவில்லை, நாவலரென்ற சொல்லுக்கும் அப்படி அர்த்தம் விரித்தது கிடையாதென்று பொய்சத்தியஞ் செய்தார்.

7. பூப்புள்ள பெண்களைப் புணர்ந்த இவர்க்குப் பெண்ணோய் வந்ததென்பது ஓரதிசயமன்று. அதற்காகவே இரசஞ்சேர்ந்த மருந்தினைப் பரி[illegible]ரி கந்தப் பிள்ளையிடம்வாங்கி யுண்டு

அதனுமேல இராமலிங்கப்பிள்ளைக்குப்பற்களும் விழுந்தமை யார்க்குந் தெரிந்ததொன்றே.

கோர்ட்டார் இதனை உடனேவிசாரியாதபடி 5ம்ˮ காலந் தவக்கஞ்செய்து வந்தமையால் ஷெ. நா. கதிரைவேற்பிள்ளை பூர்வத்தில் இராமலிங்க சுவாமிகளுக்கு விரோதமாய் நாவலர் கட்சியார் எழுதிவிடுத்த பேரம்பலப் பிரசங்கப்பத்திரிகை; தினவர்த்தமானி பத்திரிகை தத்துவபோதினி பத்திரிகை இவற்றில் எழுதிவிடுத்த விளம்பரங்கள், இராமலிங்கப்பிள்ளைபடிற்றொழுக்கம், முக்குணவயத்தின் முறைமறைந்தறைதல், அற்புதப் பத்திரிகைமுதலியனவெல்லாவற்றையும் தாம்எழுதியஅவதூறு குற்றங்களுக்கு ஆதரவாக கோர்ட்டில் தாக்கல் செய்தார்கள்.

மேற்கண்ட பத்திரிகைகளில் பொறாமை காரணத்தால் வெளியிட்டனவெல்லாம் உண்மையாமெ‌ன நம்பும்படி வயதில் முதிர்ந்தவர்களும் பெரும்பாலும் ஏழைகளும் பண்டாரங்களுமாக 21 பேர்களை சேகரித்து சான்று கூறிவைத்தனர்.

அந்த தஸ்தாவேசுகளில் உதயமூர்த்தி தேசிக சுவாமிகளால் எழுதியதெனவந்த "முக்குணவயத்தின் முறைமறைந்தறைதல்" என்பது ஒன்றும்.

இப்போது இப்பத்திரிகையின் உண்மை எவ்வளவிற்றென விசாரிப்போமாக.

## முக்குணவயத்தின் முறைமறந்தறைதல்.

என்னும் இப்பத்திரிகை (1872) பிரசோற்பதிஸு தை மாதத்தில் வேதாரண்யம் உதயமூர்த்தி தேசிக சுவாமிகளால் எழுதி வெளியிடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

அடியிற்கண்ட ஹேதுக்களால் அது நம்பத்தக்க தன்றாம்.

இப்பத்திரிகையில் உதயமூர்த்தி சுவாமிகள் தாமே கையொப்பம் வைத்திருப்பாராகில் "உதயமூர்த்தி தேசிகர்" என்றெழுதியிருப்பாரன்றி "உதயமூர்த்தி தேசிக சுவாமிகள்" எனக்கையொப்பமிட்டிரார். அது எதுபோலெனின் கதிரைவேற்பிள்ளை தாம் எழுதும் கடிதத்தில் "கதிரைவேற்பிள்ளை" என்று கையொப்பமிட்டிருக்கக் கண்டிருக்கின்றோ

மன்றி யாண்டும் "கதிரைவேற் பிள்ளை யவர்கள்" எனக் கையொப்ப மிட்டிருக்தாகக் கண்டிலேம்.

இராமலிங்க சுவாமிகள்மீது கட்சியுண்டாக்கின ஆறுமுக நாவலர் 1880ஆம் வரையில் சீவித்திருந்தனரே, இப்பத்திரிகை 1872ஆம்-ல் வெளிவந்த துண்மையாக இருக்குமாயின் அக்காலத்தே அவரதனை தமது கண்டனங்களில் எடுத்து வெளியிட்டிருப்பர். அங்ஙனமில்லா திருந்தமையானே இது பிற்பட்டகாலத்து சில பொய்மைக்களஞ்சிய புலவர் சிகாமணிகளால் கற்பித்தெழுதப்பட்டதென விளங்குகின்றது.

பின்னும் இப்பத்திரிகை அக்காலத்தே தோன்றியிருக்குமாயின் ஆறுமுகநாவலர் சார்பார் எழுதிய கண்டனங்களை யெல்லாம் மறுத்துவந்த இராமலிங்க சுவாமிகள் சார்பார் இப்பத்திரிகையினை மறுக்காது சும்மாவிடுவரோ? அல்லது இப்பத்திரிகையைப்பற்றி எங்ஙனமாவது ஓரிடத்தில் பிரஸ்தாபிககாதுவிடுத்திருப்பரோ.

இப்பத்திரிகை உதயமூர்த்தி தேசிகசுவாமிகள் பெயரால் வெளியிட்டதற்குக் காரணம் என்னையோவெனின்? அவர் இக்காலத்து இறந்துபோனவரா யிருத்தலினால் இதனை உலகர் நம்புவரென்பதேயாம், பின்னர் இராமலிங்கசுவாமிகள் சார்பார் இறந்துபோனவர்மீது அவதூறுகுற்றம் எடுத்தற்கேலாதென்பது மற்றொன்றுமாமெனக் கொள்க.

கோர்ட்டார இக்காலத்து ருசுபடுத்தவேண்டுமென எடுத்துக்கொண்ட 7 அவதூறு குற்றங்களுக்காக 33 வருஷத்தின் முன்பாகவே இப்பத்திரிகை வெளியிடப்பட்டுள்ள தென்பது ஒருவரும் நம்பத்தக்கதன்றாம்.

பின்னும் அப்பத்திரிகை வர்த்தமான தரங்கிணியென்னும் அச்சாபீசில் அச்சிடப்பட்டதென்பதனை, அவ்வாபீசு மூடப்பட்ட போதிலும் அவ்வாபீசிலுள்ள உத்தியோகஸ்த்தர்கள் இக்காலத்து முள்ளாராதலின், அவர்களேனும் ஒப்புக்கொள்ள வேண்டும். அங்ஙனமில்லா திருத்தலின் நம்பத்தக்கதன்றாம்.

இப்பத்திரிகை இறந்துபோன உதயமூர்த்திதேசிகர் எழுதினாரென்பதும், அதை இறந்துபோன சொக்கலிங்கப்பிள்ளை அச்சிடுவித்தாரென்பதும், அதுவெடுப்பட்டுபோன அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டதென்பதும், அது வருஷத்திற்கு முன்னரே வெளியிடப்பட்டதென்பதும், அதுவும், இக்காலத்தில் கோர்ட்டார்எடுத்துக்கொண்ட 7 குற்றங்களையே சம்பந்தித்ததென்பதும், அது எதிர்கட்சிக்குத் தெரியாதபடி குற்றவாளி கட்சிக்காரருள்ளே வழங்கிவந்ததென்பதும், மிகவியக்கத்தக்கதேயாம்.

அப்பத்திரிகை "முக்குணவயத்தின் முறைமறந்தறைதல்" எனப்பெயரிட்டமையானே உதயமூர்த்திசுவாமிகள் தாம்கண்டிக்கப்புகுந்த இராமலிங்கசுவாமிகள் இராஜத தாமத சாத்வீகங்களாகிய முக்குணவயப்பட்டு ஒருகாற்கூறியபடி மற்றொருகாற்கூறாராய் மனங்கொண்டவாறு பிதற்றித்திரிந்தாரென்பது இவர்கருத்தேபோலும்.

உலகிற் பற்றுடையாரெல்லாம் முக்குணவயத்தரென்பதும், பற்றற்றவரெல்லாம் நிர்க்குணரென்பதும், சகலசாத்திர சம்மதமேயாம். அதனால் உலகத்தோற்றத்திற்குக் காரணபூதர்களாயுள்ள பிரமவிஷ்ணு ருத்திரர்மூவரும் முறையே இராஜததாமத சாத்வீக குணங்களிற் றோன்றினவர்களேயாம்.

இவைநிற்க ஊருராயோடி கருமாதி கல்லெடுப்பு காரியங்கள்செய்து, சிறிது ஊதியம்பெற்று வயிறுவளர்க்கும் உதயமூர்த்திதேசிகசுவாமிகள் எக்குணவயத்தராவர்?

---

## திருவருட்பா, ஆறாந்திருமுறை.

### பிள்ளைச்சிறுவிண்ணப்பம்.

இறக்கவுமாசையில்லை இப்படிநானிருக்கவு மாசையின்றினிநான்
பிறக்கவுமாசையில்லை யுலகெல்லாம் பெரியர் பெரியரெனவே
சிறக்கவுமாசையில்லை விசித்திரங்கள் செய்யவுமாசையொன்றில்லை
துறக்கவுமாசையில்லை துயரடைந்து தூங்கவுமாசையொன்றிலையே.

எனஇவ்விதமாக பரமசிவனிடம் விண்ணப்பித்து உலகை வெறுத்து, ஒருவரும்நாடற்கரிய வடலூர்ப் பெருவெளியில் ஓர் சிறுகுடிலில் ஏகாந்தநிஷ்டராயிருந்த இராமலிங்கசுவாமிகள் எக்குணவயத்தராவர்?

இதனால் உதயமூர்த்திபண்டாரம் முக்குணவயத்தரென்பதும், இராமலிங்கசுவாமிகள் நிர்க்குணரென்பதும், பேதைப்

பெண்களும் சற்றும் ஐயமின்றிக் கூறுவரன்றோ. உதயமூர்த்திபண்டாரம் தம்மிடத்துள்ள மூக்குணத்தை சுவாமிகளின் மீதேற்றிக்கூறுவது தமதறிவின்மையேயாம்.

## இந்தபத்திரிகையில் பூர்வபட்சத்தார்.

1 "சென்னப்பட்டணம் இராஜதானியைச்சேர்ந்த வடலூர் மேட்டுக்குப்பத்திலே கருங்குழிகணக்கர், ம-ா-ா-ஸ்ரீ, இராமலிங்கப்பிள்ளையவர்கள அற்புதப்பத்திரிகையொன்று விளம்பரமிட்டார்" என்றார்.

## மறுப்பு.

மஞ்சக்குப்பம் ஜில்லா அல்லது தென் ஆர்க்காடுஜில்லாவை ச்சேர்ந்த வடலூரென்றது "சென்னைப்பட்டணம் இராஜதானியைச்சேர்ந்த வடலூர் என்றமையானே, திருத்துறைப்பூண்டியும் வடலூரும் ஒரே இராஜதானி யுள்ளடங்கியிருக்கவும், வடலூரை சென்னைப்பட்டணம் இராஜதானியைச்சேர்ந்த வடலூரென வேறுபிரித்துக்கூறுவதால் இப்பத்திரிகையை எழுதினவர் சென்னபட்டணம், இராஜதானிக்குப் புறம்பாயுள்ள ஈழநாட்டு இராஜதானியாரே என விளங்குகின்றது. பம்பாய் இராஜதானியார் அல்லது பங்காள இராஜதானியாரெனக் கொள்ளலாகாதோ வெனின், அவரை தமிழ்நாட்டிலவா மாதலின், ஈழநாட்டு இராஜதானியாரேயென வெள்ளிடைமலைபோல் விளங்கும்.

அதுநிற்க சுன்டு உதயமூர்த்திசுவாமிகள் "கருங்குழிக்கணக்க" ரென்றவிடத்து இராமலிங்கசுவாமிகளை இழித்தும், "ம-ா-ா-ஸ்ரீ" என்றவிடத்து உயர்த்தியும, கூறினமையானே இவர் தாமதகுணத்தையும் சாதவீககுணத்தையும் உடையாரெனவும் வெளியாகின்றது.

## பூர்வபட்சத்தார்.

2 "அதனை (அற்புதப்பத்திரிகையை) அவரதுசிஷ்யர்களுள் கண்டிராக்டர் ஆறுமுகமுதலியார என்பவரும ஆநேர்சபாபதி சிவாசிரியர் என்பவரும் ஊரூர்கட்டோறும் கொடுத்துவந்தார்கள். இராமலிங்கப்பிள்ளையின் பெரும்புளுகுக ளெல்லாவற்றையும் உண்மையென்று பலர் நம்பினர்" என்றார்.

## மறுப்பு.

ஆறுமுகமுதலியார் என்பவர் ஓர் பெரிய இஞ்சினியர். ஆபீர் சபாபதி சிவாசிரியர் பெரிய ஆகமபண்டிதர். இவர்கள் தாமோ இப்பத்திரிகைகளை ஊரூர்கடோறுங் கொண்டுபோய்க்கொடுப்பவர்களாவார். அன்னசாலையில் ஆயிரக்கணக்காகக் கூடியிருந்தாருள் இப்பத்திரிகை யினைகொண்டுபோதற்கு சாமானியராயுள்ள வேறொருவருங் கிடைத்திலரா? இராமலிங்க பிள்ளை தாமே எடுத்துக்கொண்டு போனாரென்றது அம்மட்டில்விட்டதே ஆச்சரியம்.

## பூர்வபட்சத்தார்.

3 " தஞ்சாவூர்ஜில்லா திருத்துறைப்பூண்டித் தாலூக்காவில் இருந்த தைசவரான எமது சிஷ்யர் ஒருவர் இறந்தார். அவரது மனைவி அறியாமையாலும், தனது கணவனைப்பெறவேண்டுமென்ற அவாவினாலும் பத்திரிகைகொடுத்துவந்த இராமலிங்க பிள்ளைசிட்டர்களுக்கு அறிவிக்க, அவர்கள்சுவாமிகள் எழுப்பிக் கொடுப்பார், நீ கொண்டுவரலாமென்று சொன்னார்கள். அவள் அவ்வாறே வடலூருக்குக்கொண்டுபோக வெளிப்பட்டபோது, அவன் இனத்தவராய முத்துச்சாமிபண்டாரம் பூ. சுந்தரபண்டாரம் வேதாச்சலபண்டாரம் முதலியோர் கொண்டுபோதல் கூடாதென்று மறிக்கவும், அவள்கேளாது எடுப்பித்துக்கொண்டு வடலூருக்குப்போய்சேர்ந்தாள். இராமலிங்கம்பிள்ளை எழுப்பித்தருவேனென்று சொல்லப்புதைத்தனள்" என்றார்.

## மறுப்பு.

நண்பர்களே இந்த ஜெகஜாலபுளுகரின் கட்டுக்கதையை சற்றே கவனித்துக்கேளுங்கள்.

சைவரான எமது சிஷ்யர் ஒருவர் இறந்தாரென்றார்.

ஈண்டு குறிக்கப்பட்ட சிடன்யாவனென விசாரிக்கப்புகின் வந்தியாபுத்திரன் அல்லது மலடிமைந்தனேயாம். அவன் மனைவியோவென்றால ககனாரவிந்தம் அல்லது ஆகாசத்தாமரையாம். இவ்விருவரும் கற்பனுமறுக்களாம். உள்ளபடியே இவருக்குச் சிடனிருந்திறந்திருப்பானாயின் அவன்பெயர் இன்னதென்றும் அவன் இன்னான் மகனென்றும், அவன் மனைவி இன்ன பெயருடையாளென்றும் விளக்கியிருப்பார்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்.

### பண்-கொல்லிக்கௌவாணம்.

தம்மானையறியாதசாதியாருளரேசடைமேற்கொள் பிறை யானைவிடைமேற்கொள்விகிர்தன், கைம்மாவி னுரியானைக்கரி காட்டிடாடலுடையானைவிடை யானைக்கறைகொண்டகண்டத், தெம்பான்ற னடிக்கொண்டென் முடிமேல் வைத்திடுமென்னு மாசையால்வாழ்கின்றவறிவிலாநாயே, னெம்மானை யெறிகெடி லவீரட்டானத்துறைவானை யிறை போதுமிகழ்வன்போலி யானே.

எனக்கூறியபடி தம்மூரிலுள்ள தமது சிடன் பெயரின்ன தென வறியாத ஆசிரியரு முலகிலுண்டோ? இப்படிப்பட்டவர் அயலூரி லிருந்துவந்த இராமலிங்கசுவாமிகளின் மாணுக்கர்கள் ஆறுமுக முதலியார் என்றும் சபாபதி சிவாசிரியர்என்றும் எவ் வாறறிந்தனரோ?

பிரேதத்தை வெளியே கொண்டுபோனபோது "அவளது இனத்தவராய முத்துச்சாமி பண்டாரம், பூ. சுந்தரபண்டா ரம், வேதாச்சலபண்டாரம் முதலாயினோர் வந்துதடுத்தார்கள்" என்றமையானே, தமக்குச் சம்பந்தமில்லாத இவர்கள் பெய ரைத் தெரிந்தெடுத்துக் கூறியவருக்கு, இறந்துபோன தன் னோர் சீடன்பெயரும் அவன் மனைவிபெயரும் தெரியாமற்போன தென்னையோ? உண்மையில் தமக்குச் சீடனொருவ னிருந்தி றந்தாலன்றோ இவர் அவன் பெயரைச்சொல்லப் போகின்றார். ஆகையால் இவைமுற்றுங் கட்டுக்கதையாமெனக்கொள்க.

உதயமூர்த்திப் பண்டாரத்துக்குச் சீடனொருவனிருந்திறந் தானெனக் கொளினும் "இவன் மனைவியின் இனத்தவர்கள் பண்டாரங்கள்" என்றபோது இறந்துபோனசீடனும் அவன் மனைவியும் பண்டார வமிசத்தவர்களாகவே இருக்கவேண்டும். அங்ஙனம் இவ்விருவரும் பண்டார வர்க்கங்களா யிருப்பாரா யின், இவ்வுதயமூர்த்திப்பண்டாரத்துக்கு வேறு எந்தப் பண்டா ரமாயினும் சீடனாக வருவனோ? ஒருகாலும்வாரானெனக்கொ ள்க. அதனால் இப்பத்திரிகை உதயமூர்த்திப்பண்டாரத்தால் எழுதப்பட்டதன்றாம். ஆறுமுகநாவலர் சார்பாரில் இக்காலத் துள்ளசிலர் இராமலிங்க சுவாமிகள் பேரிலுள்ள அழுக்காற்றால்

எழுதி விடுத்த கட்டுக்கதையேயாம். இது முழுப்பூசுணைக்காயைச் சோற்றில் மறைத்தலொக்கும். இவர் கூறும் ஏனைய கூற்றும் முற்றும் பொய்மையேயாம்.

இவ்வுதயமூர்த்திப் பண்டாரமே எழுதினதாகக்கொளினும் இவர் தமது சீடன்பெயரைக் குறியாததற்குக் காரணம் அவ்வூரிலுள்ள செனன மரணக் கணக்கு இவர் பொய்மையைக் காட்டிக்கொடுக்குமென் றஞ்சினமையே யெனக்கொள்க.

இந்தப்பிரேதத்தைக்கொண்டுபோகக்கூடாதெனத் தடுத்த முத்துச்சாமி பண்டாரம், பூ. சுந்தர பண்டாரம், வேதாச்சல பண்டாரம்ஆகிய இவர்களேனும் உண்மையில் அந்நாட்டிலிருந்தனர்களோவெனின் அவை முற்றுங் கற்பனையேயாம். ஆனால் ஈண்டுக்கூறிய பெயர்கள் எவர்களைக் குறித்தனவெனில்? கதிரைவேற் பிள்ளையின் கபடநாடகத்தைக் கண்டித்தற்குச் சென்னையிற் றோன்றியுள்ள தேவாரம்-முத்துச்சாமிமுதலியார், பூவை-கல்யாணசுந்தர முதலியார், கிறிஸ்டியன் காலேசு தமிழ்ப்பண்டிதர் வேதாச்சலம் பிள்ளை இவர்கள் பெயரைமாற்றிக் கூறியதென்க. இம்மூவரையும் அக்காலத்தில் உதயமூர்த்திதேசிகர் அறிந்திலராதலின் இப்பத்திரிகை யெழுதினவர் கதிரைவேற்பிள்ளையேயெனக்கொள்ளற் கிடமாகின்றது. பின்னும் இவ்வுதயமூர்த்தி சுவாமிகளேனும் உண்மையி லிருந்தனரோவென ஆலோசிக்குமிடத்து, இக்கற்பனைப்பத்திரத்தை யார் பெயரால் வெளியிடலாமென யோசித்துக் கொண்டிருக்கையில் தம்மனதில் உதயமாயின விதற்கு உதயமூர்த்தி தேசிகசுவாமிகள் எனப்பெயர் புனைந்தனர் போலும். இவர் எழுதினாரென்று எவ்வாறு கொள்ளலாமெனின், இப்பத்திரிகை யெழுதிய வசனநடையாலும், இவர் முன்னர் சாதிப்புரட்டரென்றும், பன்னிரு பொய்மை கூறினவரென்றும் பலபத்திரிகைகள் வெளிவந்திருப்பதாலும், இராமலிங்கசுவாமிகளைத் தூஷித்தெழுதிய மருட்பா மறுப்பு முதலிய பத்திரிகைகளில் தமது பெயரைக் குறியாது கரந்திருந்து தமது மாணாக்கரின் பெயரால் வெளியிட்டிருப்பதனாலுமென்க. பொய்வழக்குப்பேசுதல், பொய்சத்தியஞ்செய்தல்,பொய்பத்திரம்படைத்தல், யாழ்ப்பாணத்தில் மிகுந்துள்ளதென ஆறுமுக நாவலரே கூறியிருப்பதை யாழ்ப்பாணசமயநிலை 26-வது பிரிவிற்காண்க. பத்திரிகைகள் கொடுக்கவந்த இராம

லிங்கப்பிள்ளை சீடர்களுக்குத் தெரிவிக்க அவர்கள் சுவாமிகள் எழுப்பிக்கொடுப்பார் நீ கொண்டுவரலாமென்று சொன்னாரென்றமையாலே, இந்தப்பெண் தனது புருஷன் இறந்துகிடக்க, அப்பிரேதத்தின் முன் அழுதுக்கொண்டிருக்குங் காலத்தில் இராமலிங்கசுவாமிகளின் சீடர்கள் இப்பத்திரியைக் கொண்டு போய் வாசித்துக் காண்பித்து அவளைத் தேற்றிப் பிணத்தையெடுத்துவரச்செய்தாரெனத் தெரியவருகின்றது. அங்ஙனமாயின் சாவுவீட்டில் இச்சீடர்கள் எங்ஙனந்துணிந்து நுழையக்கூடும்? இடங்கொடுத்தாலும், அழுதுகொண்டிருக்கிற பெண்ணினிடத்து முன்பின் அறிமுகமில்லாத இவர்கள் எவ்வாறு போய்ப்பிரசங்கிக்கக்கூடும்? பிரசங்கித்தாரென்றாலும், இவ்வறுதலிப்பெண் அழுகையைவிடுத்து எங்ஙனம் இவர்கள் பிரசங்கத்தைச் செவிகொடுத்துக்கேட்க இசைவள? கேட்டாளெனினும், செத்தாரை இராமலிங்கசாமிகள் எழுப்புவாரென்றதில் அவ்வளவு சுலபத்தில் இவளுக்கு எப்படி நம்பிக்கை யுண்டாகக்கூடும்? அவளுக்கு நம்பிக்கையுண்டாயதெனினும், அவ்விடத்துக் கூடியுள்ள பந்துஜனங்கள் எவ்வாறு நம்புவார்கள். இவர்களைத் தடிகொண்டு புடைத்தோட்டுவார்களன்றோ? அந்தோ! கொடுமை கொடுமை!! இவர் நாவில் நரம்பில்லார்போன்று புளுகுகின்றனரே!

"அவள் கேளாது எடுப்பித்துக்கொண்டு வடலூருக்குப் போய்ச் சேர்ந்தாள்" என்றாரன்றோ. திருத்துறைப்பூண்டிக்கும் வடலூருக்கும் சுமார் 100 - மயில் தூரமிருக்க அவ்வளவு துலைதூரமாயுள்ள இடத்திற்கு இப்பிரேதத்தை எவ்வாறு எடுத்துச்செலுத்தக்கூடும்!

பிணத்தை வடலூருக்குக் கொண்டுபோகவேண்டுமென்று இராஜங்கத்தாரை உத்திரவு கேட்டால் யாதுக்கென காரணங் கேளாது விடுவரோ! இராமலிங்கசாமி செத்தாரை எழுப்பித் தருவேமென்றாரென்றால், மனுதாரரையும் இராமலிங்கசாமியையும் பிடித்துக் காவலிலடைத்துத் தெண்டித்துவிடுவார்களன்றோ!

இறந்தகாலத்து அழுது புரண்டுத் தேறி பிரேதத்தைக் கொண்டுபோகலாமென்றும், கொண்டுபோதல கூடாதென்

றும், இவனுக்கும் அங்குள்ளவர்களுக்கும் ஒருவர்க்கொருவர் வாதங்கள் நிகழ்ந்து ஒன்றைநிச்சயிப்பதற்கும், இராஜாங்கத்தில் மனுக்கொடுத்து அவர்கள் உத்தரவு பெறுதற்கும் குறைந்தது 1 நாள் ஆகும் 1.

100 மயில்தூரம் பிரேதத்தை எடுத்துச் செலுத்துவதற்கு (இரவில் பிணங் கொண்டுபோகலாகாதாகலே) நாள 1-க்கு 20 - மயில். விகிதம்கணக்கிட்டாலும், நாள் 5 ஆகும் 5.

வடலூர் சென்றபின்னும் இராமலிங்க சுவாமிகள் தெரிசனம் எளிதிற் கிடையாதாகலே, அங்கு காத்திருந்து அவர் தெரிசனங்கண்டு பிரேதத்தைப்படைக்க உத்தரவு பெறுதற்கு 1 நாள் ஆகும் 1.

எவ்விதத்தும் கெட்டியாய் ஒருவாரம் ஆகும் 7.

இவ்வேழுநாள் வரையினும் இவர்களை பண்டாரசாதியரா யிருப்பதால் பிணமிருக்கப் போசனஞ்செய்வரோ? பிரேதத்தை ஒருகிராமத்திலிருந்து மறுவொரு கிராமத்திற்குக் கொண்டு செலுத்தக் முடியுமா? "*சீவாத்தூர் கிராமணி செத்துங்கெடுத்தான் இருந்துங்கெடுத்தான்" என்ற பழமொழி யின்னேயேனும் கேட்டிலரோ?

* சீவாமென்றவூரில் பணக்கார கிராமணி ஒருவனிருந்தான். அவன் அவ்வூரிலுள்ளாரை யென்னேமுந் துன்பப்படுத்திவந்தான. இவன் எக்காலம் ஒழிவானென அவர்கள் பிரார்த்தித்து வருங்நாளில் இவனுக்கு மரணகாலம் நேரிட்டது. அக்காலத்தில் தான் செத்தபின்னும் அவர்களுக்குத் தீங்கிழைக்கவேண்டுமெனக்கருதி அக்கிராமத்தாரை யெல்லாம் அழைப்பித்து அவர்களுக்கு மிகவும் வணக்கமாய் வந்தனஞ்செய்து நான் இதுகாறும் தெரியாத்தனமாக உங்களுக்கு எத்தேதோ தீங்குகள் செய்துள்ளேன், அவற்றை நீவிர் மனதிற்கொள்ளாது மன்னித்து நான் நல்லகெதியடையும்படி எனக்கோருதவிசெய்யும்படி தங்களைப் பிரார்த்திக்கிறேன் என்றான். அதற்கு எல்லாரும் இரக்கமுற்றவர்களாய் உமக்கு வேண்டுவதென்னையுளவெனவினவினார்கள். ஐயன்மீர், நான் இறந்தவுடனே என்னைக்கொண்டுபோய் இந்தக்கிராமத்திற்கடுத்த ஓர் ஆலடியிலசமாதிசெய்விக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தான். அவ்வாறேசெய்வேமெனக்கூறி அவன் இறந்தவுடன் எடுப்பித்து அவ்வாலடியிற் கொண்டுபோனார்கள். அது அடுத்த கிராமத்தின் எல்லையாதலால் அவ்வூரார்ஒன்றுகூடி தடிகொண்டு புடைத்தார்கள். இவ்விருகிராமத்தார்களும் ஒருவர்க்கொருவர் புடைப்புண்டுமிகவருந்தினபோது சீவாத்தூர்க்கிராமணி செத்துங்கெடுத்தானிருந்துங்கெடுத்தானென்று உணர்ந்தார்கள்.

ஏழுநாள் பிரேதத்தைக்கொண்டுபோக இராஜங்கத்தார் இடங்கொடுப்பார்களா? உத்திரவு கொடுத்தாலும் இந்த 7 நாள் வரையில் பிரேதம் அழுகி நாற்றமெடுத்துப்போகாதா? அக்காலத்தில் திருத்துறைப்பூண்டிக்கும் வடலூருக்கும் புகை வண்டிமார்க்கம் ஏற்படவில்லையே. ஏற்பட்டிருந்ததென்றாலும் ஒருவாறாக ஒப்பலாம். இவற்றையெல்லாம் யோசிக்குமளவில் "பொய்யா புளுகா எங்கேபோனாய் என பெண்டாட்டிசெத்த இழவுக்குப்போனேன்" என்பானைமானும்.

"இராமலிங்கப்பிள்ளை எழுப்பித்தருவேனெனப் புதைத்தாள்" என்றமையானே, உதயமூர்த்திதேசிகர் வடலூருக்கு அக்காலத்தில் போகாதிருக்கவும் இராமலிங்கசாமி அவளுக்குச் சொன்னது இவருக்கு எப்படித்தெரிந்தது. உதயமூர்த்திப் பண்டாரஞ் சொன்னதெல்லாம் உண்மையேயாயின் இதுவும் உண்மையேயாம். அவையெல்லாம் பொய்மையாமெனக் கொள்ளின் இதுவும் பொய்மையாமென வொழிக்க.

இக்கட்டுக்கதை திருத்துறைப்பூண்டியில் இறந்தபிணத்தைத எழுப்பித் தருவேமென்று இராமலிங்கப் பிள்ளை சொன்னமையால் வடலூரில் கொண்டுவந்து புதைக்கப்பட்டதென்று கோர்ட்டார் எடுத்துக்கொண்ட 5-வது குற்றத்தை நிராகரித்தற்பொருட் டெழுந்ததெனக்கொள்க.

## பூர்வபக்ஷத்தார்.

(4) "கணவன்செத்த பின்னும் கிரியைசெய்யாமல் தாலி கட்டிக்கொண்டிருக்கும்படி இராமலிங்கப்பிள்ளை சொன்னமையால் அவன் மனைவி அங்கு சுமங்கலியாயிருக்கிறாள்." என்றார்.

## மறுப்பு.

உதயமூர்த்தி சீடனொருவன் இறந்திறந்ததும், அவன் மனைவி அப்பிரேதத்தை வடலூருக்குக்கொண்டுவந்து புதைத்ததும் உண்மையாக விருக்குமாயின், இராமலிங்க சுவாமிகள் அவளைத் தாலிகட்டிக்கொண்டிருக்கச் சொன்னாரென்பது உண்மையாகவேயிருக்கும். அங்ஙனம் நடந்ததில்லையாதலின்சுவாமிகள் அவ்வாறு சொன்னதுமின்றெனவொழிக்க.

## பூர்வபக்ஷத்தார்.

(5) "அவ்வறுதலியின் உறவின்முறையார் எவ்விதத்தும் அவளை அழைத்துவந்து கிரியைகளை முடிக்கவேண்டுமென்ற

னர். அங்கே மேட்டுக்குப்பம் போனபோது அங்கே கைம் பெண்கள் தமது புருஷர்களை எழுப்புவிக்கிறதற்காகக் கூடியிருந்து சுமங்கலிகளைப்போலக் குங்குமம், மஞ்சள், தாலி, நகை இவை தரித்திருந்தனர். சைவத்திற்கு மாறாக அக்கூட்டங் காணப்பட் டமையால் உலகாயதக்கூட்டமாக விளங்கிற்று. அவ்வுலகாய தக்கூட்டமாகிய பெண்கள் கூட்டம் புடைசூழ இராமலிங்கப் பிள்ளை உலகாயதமதப்பிரபுவாகக்காணப்பட்டார். சைவராயி ருந்தால் அத்தகைய மாறுபாடான செய்கைகளைச் செய்யவும் செய்விக்கவும் சம்மதிப்பாரோ?" என்றார்.

## மறுப்பு.

இவ்வாக்கியம் முற்றும் பொய்மையேயென வெள்ளிடை மலைபோல்விளங்குவதால்மறுக்கப்படவேண்டுவதில்லை. ஏனென்றால் ஆகாயத்தில் அம்மி பறக்கக்கண்டேனென்று ஒருவன். அதற் குச்சான்று கூறவந்த முதல்சாட்சி அது கிழக்கிலிருந்து மேற் கே பறந்ததென்பது நானுமறிவேனென்றான். இரண்டாவதுசா ட்சி அப்போது சரியாக மாலை 6 - மணி நேரமிருக்கும் நானுங் கண்டேனென்றான். மூன்றாவதுசாட்சி அப்போது நான்பட் டம்பறக்க விட்டிருந்தேன் அந்த அம்மியில் பட்டு பட்டம் கிழிந்துபோயிற்று, அதனால் அம்மிபறந்ததை நானும் அறி வேனென்றான். இது முற்றும் பொய்யென எல்லாருமறிந்தி ருந்தபோதிலும், அம்மி அவ்வாறு ஆகாயத்தில் பறந்ததில்லை என எவரேனும் சாட்சியால் ருசுப்படுத்தமுடியுமோ? அதுபோ லாமிதுவெனக்கொள்க.

4, 5 பிரிவுகளிலுள்ள இக்கட்டுவாக்கியம் இராமலிங்கப்பிள்ளை உல காயதத்தில் முதிர்ந்து மகளிர்கூட்டமே இவர்க்கு இறுதிக்கூட்டமாயின தென்னும் 2 - வது குற்றத்தை நிராகரித்தற்பொருட்டெழுந்ததெனக் கொள்க.

## பூர்வபக்ஷத்தார்.

(6) "அங்கே புடமிடுவதும் மூலிகைகள் துவைப்பதும், அரைப்பதும், காய்ச்சுவதுமாகஇருந்தார் சிலர். கன்டிராக்ட்டர் ஆறுமுகமுதலியார் இரண்டொருவரைக்கொண்டு தாம்சென்னை யினின்றுங்கொண்டுவந்த இரும்புத்துண்டுகளை அடுக்குவித்தார். இது எதற்கென்று கேட்டேன். இராமலிங்கப் பிள்ளை இரச வாதம் பண்ணுதற்கென்றார்." என்றார்.

## மறுப்பு.

நண்பர்களே! ஈண்டு சற்றே கவனியுங்கள். நமக்கு இரசவாதஞ்செய்யத்தெரியுமென பொய்மைகூறிவந்த எத்தனையோ புரட்டர்களைக் கண்டிருப்பீர்கள் அல்லது கேட்டிருப்பீர்கள். பலபேர் கூட்டங்கூடி யிருக்குமிடத்தில் நான் இரசவாதஞ் செய்வேனென அறைகூவி மூலிகைகள் துவைத்ததாவது, அரைத்ததாவது,காய்ச்சினதாவது, புடமிட்டதாவதுகண்டதுண்டா? அலலது கேட்டதுண்டா? பொன்செய்தற்காக பாரக்கணக்கான இரும்புகளை அடுக்கிவைத்திருந்ததை கேட்டதுண்டா?

இவ்வாறு நடந்ததுண்மையேயாயின் போலீசார் இவரை உடனேகொண்டுபோய்ச் சிறைச்சாலையி லடைத்துத் தண்டியாதுவிடுவரோ.

நாவலரின் சார்பார் இராமலிங்கசாமி இரசவாதஞ் செய்கிறாரென்று புரளிச்செய்ததைக்கேட்டு போலீசார் சோதனைக்குவந்தார்கள். சுவாமிகள் தாமிருக்குங்குடிசையைவிட்டு வெளியேவந்து உள்ளேபோய்ச் சோதனை செய்துக்கொள்ளலாமெனச்சொல்லவும், அவர்கள்வந்து பார்த்து அவ்விடத்தில் அவ்வாறொன்றும் நடந்திலதென்றறிந்து கலெக்டருக்கு ரிப்போர்ட்டு செய்து போயினமையாவரோ யறியாதார்?

## பூர்வபக்ஷத்தார்.

(7) "அதன்பின் எமது சிஷயன் மனைவியையும் அவள் கொடுத்த பணத்தையும் கொடுத்தனுப்பவேண்டும். அந்த பிணத்தையும் இவ்விடத்திற்றானே கொளுத்துவிக்கின் அபரக்கிரியைகளை முடிப்பேம் என்றேன்." என்றார்.

## மறுப்பு.

இதனால் செத்தபிணங்களை இராமலிங்கப்பிள்ளை எழுப்பித்தருவேமென முன்னர் பணம் வாங்கிக்கொண்டு புதைப்பிக்கச்செய்தாரென ஏற்படுகின்றது.

முன்னர் இவ்வுதயமூர்த்தி பண்டாரம் திருத்துறைப்பூண்டியிலிருந்து கொண்டுவந்த பிணத்தை இராமலிங்கப்பிள்ளை எழுப்பித்தருவேமென்றுசொல்ல புதைத்தாள் என்

றனரேயன்றிப், பணம்வாங்கிக்கொண்டு புதைப்பித்ததாகக்கூற வில்லை. பணம்வாங்குகிறரென ஏற்பட்டபோதும், மயானத்தி லுள்ள வெட்டியானைப்போல பிணம் ஒன்றுக்கு இத்தனைப்ப ணம்வாங்குகிறரென யாதோர் கணக்கு ஏற்பட்டதாகவு மில்லை. பணங்கேளாது பிணத்தைப் புதையுங்கள் நாம் எழுப்பித்தரு வேமென்றுரென்றாலும், இவர் பெரியவராயிருத்தலின் பணத் தினிடத்து விருப்பமில்லாதவர், இவரிடத்தில் ஏதேனுமகத் துவமிருக்குமென நம்பிச் செய்வார்கள். பணங்கேட்டா ரென் றால் இது பணஞ்சம்பாதிக்கு நிமித்தம் ஏற்பட்ட ஒருவித மோசமென ஒருவரும் நெருங்கார். பின்னும் பிணங்களையும் அவ்விடங்கொண்டுபோகார். ஐயோ பாவம் இவர்கூறும்கூடை புளுகளில் ஒருண்மையேனு மிருக்கலாகாதா !

இவ்வுதயமூர்த்திப்பண்டாரம் அவள் அவ்வாறு கொடுத் திருந்ததாகப் பணத்தைக்கேட்டார் என்றாலும் ஒருவாறு ஒப்ப லாம். கொளுத்தவேண்டுமென மண்ணிற் புதைக்கப்பட்ட பிணத்தை வெளிபடுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட் டார் என்பது பொருந்தாவிஷயமாம். ஏனென்றால் புதைக் கப்பட்ட பிணம் அழுகி நாறுமெடுத்து மண்ணில்மக்கிப்போ னபின்னர் எடுத்தால் எலும்பிருக்குமேயன்றி வேறுஎன்னையிரு க்கும்? அவ்வெலும்பையா வெடுத்துக்கொளுத்துவது ?

பின்னும் "அப்பிணத்தைக் கொளுத்துவிக்கின் அபரக்கிரி யைகளை முடிப்பே"மென்றமையானே அவ்வுடலந்தகனஞ்செய் யாதவரையில் அபரக்கிரியை செய்யலாகாதென்பது இவர் கருத் தேபோலும். ஊர்ப்பிரயாணம் போகையில் வழியில் பேதி கண்டிறந்தாரைக் கொளுத்தவேலாது புதைப்பித்துவிட்டு வீடு வந்து சேர்ந்தபின் இவர்போன்ற பண்டாரங்கள் அபரக்கிரியை முடித்து வைக்கின்றாரே அது எந்த பிரமாணத்தைக்கொண்டு செய்கின்றார்கள்? அந்தப் பிரமாணங்களை இவர்கற்றிலார் போ லும்! முதலைவாய்ப்பட்டிறந்தனர் பலர். நீரில்விழுந்திறந்தாரும் மலையில்விழுந்திறந்தாரும் பலர். இவர்களுக்கு அபரக்கிரியை செய்வதில்லையா. சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவாய்ப்பட் டிறந்த பாலனை வெளியாக்கியதுபோல இவர் பிணத்தைவெளி ப்படுத்தி கொளுத்திய பின்னர்தான் அபரக்கிரியை முடிப் பரோ?

மோக்ஷத்தைச் சென்றடையு மார்க்க மின்ன தென்றறியாது, சிவயோகியராயுள்ள இராமலிங்கசுவாமிகளை தூஷித்துத் தீராநரகத்திற் சென்றுழலும் இவர்தாமோ தமது சீடர்களுக்கு அபரக்கிரியைகளைச்செய்து அவர்களை வாலுலகிற்குச் செலுத்தப்போகின்றார்.

## பூர்வ பக்ஷத்தார்.

(3) " அவற்றிற்குச் சிறிதுநேரம் பேசாமலிருந்தார். யாம் இராமலிங்கப்பிள்ளை அவர்களே தயை செய்கவென்று சொன்ன மாத்திரத்தே, பிள்ளை அவர்கள் குட்டிபோட்ட நரிபோலக் குரைத்துக் கோபித்து இவரை அப்புறப்படுத்துங்கள் என்றார். எமக்கு அச்சமும் வியப்பும் அதிகரித்து என்ன குற்றஞ்செய்தே மென்று கேட்க, இங்கே பிள்ளையென்ற சொல் கூடாது. திருவருட் பிரகாசவள்ளளார் அல்லது சுவாமிகள் என்று சொல்ல வேண்டும் என்று அவர் தமது சீடர்க்குத்தெரிவித்தபடி அவர்களெனக்குச்சொன்னார்கள் " என்றார்.

இராமலிங்க சுவாமிகளை வாதில் வென்று வெற்றி பெற்று வரும்படி ஈழநாட்டாரால் ஏவப்பட்டு கோபாவேசங்கொண்டு வந்த குதர்க்கவாதிகளெல்லாம் சுவாமிகள் சந்நிதி தீக்ஷண்யத்தால்அவர்கள் கோபாவேசம்நீங்கிச்சாந்தமூர்த்திகளாகிமௌன நிலையிலிருந்து, சந்நதியி னின்றும் நீங்குங் காலத்து தீர்க்க தண்டஞ்செய்து வந்தார்களென்றால், இராமலிங்க சுவாமிகள் கோபாவேசங் கொண்டாரென்பதை யாவரே நம்புவர்? மலையைப்பார்த்து நாய்குரைத்ததொப்ப இவர்மேல் இவ்வாறுசொல்வதனால் வரும் பயன் எவ்வேயோ? இவர் கோபமிருந்தவிடத்துங் குடியிருந்தறியாரே சற்றும் பழிபாவத்திற்கஞ்சாது இவ்வாறுகூறிய அண்டப்புரட்டர் வேறு என்னதான் கூறார்!

பிள்ளையென்று சொல்லப்படாது திருவருட் பிரகாச வள்ளலார் அல்லது சுவாமிகள் எனக்கூறவேண்டுமெனக்கூறினாரெனின், இராமலிங்கசுவாமிகள் தமது திருவருட்பாவில்"பெரியவர் பெரியவரெனவே சிறக்கவுமாசையில்லை " யென்றவாக்கியத்தை யேனுமறிந்தாரிலரோ ? ஆகையாலிவர் கூறுவன வெல்லாம்பொய்மையாமென் றொழிப்பாம்.

## பூர்வ பக்ஷத்தார்.

(9) "யான் ஆச்சரியவசத்தனாய் அற்புதப் பத்திரிகையிலும், தாம்பாடி யச்சிடுவித்த புத்தகத்திலும் இராமலிங்கப்பிள்ளை என்று தானே போட்டிருக்கிறார். இராமன் என்ற பெயர் இராமலிங்கம் என்றாகி அது இராமலிங்கப்பிள்ளையாய் மாறியிருந்ததே. அதுவும் ஒருவரிடத்திற்குள் சுவாமிகளாகித் திருவருட் பிரகாசவள்ளலாரானது எமக்குத்தெரியாது" என்றார்.

## கண்டனம்.

இவ்வுதயமூர்த்திப் பண்டாரம் இராமலிங்கசுவாமிகள் குழந்தைப் பருவமுதலாக உடனிருந்து உண்டு வளர்ந்தனரோ? சுவாமிகள் குழந்தைப்பருவத்திருந்த இடம் சென்னை நகராகவும் பண்டாரமிருந்த விடம் 200 மயிலுக்கப்பாற்பட்ட திருத்துறைப்பூண்டியாகவுமிருக்க, சுவாமிகளை இராமன் என்றழைத்ததும், இராமலிங்கமென்றதும் இராமலிங்கப்பிள்ளை என்றதும் இவர் எப்படியறிந்தனரோ? தம்மூருக்குசமீபமாயுள்ள வடலூருக்குச்சுவாமிகள்வந்து 18-வரு காலம் வரையில் வசித்திருக்கவும் ஒருவருடத்திற்குள்ளாக சுவாமிகளானதும் திருவருட்பிரகாசவள்ளலாரானதும் எமக்குத் தெரியாதென்றமை என்னையோ? இவர் சுவாமிகளைவிட்டு ஒருவருடந்தான் நீங்கியிருந்தார் போலும். தூரத்திலிருந்தகாலத்தில்நிகழ்ந்தன வெல்லாமறிந்து சமீபத்தில் வந்திருந்த காலத்து நிகழ்ந்தன வறியாமற் போனதற்குக் காரண மென்னையோ?

7. 8. 9. பிரிவுகளிலுள்ள இக்கட்டுக்கதைகள் இராமலிங்கப்பிள்ளை தம்மை திருவருட்பிரகாசவள்ளலார் அல்லது சுவாமிகள் எனச்சொல்லும்படி பணித்தார். தம்மை இராமலிங்கப்பிள்ளை என்று சொன்ன விடத்து குட்டிபோட்ட நாய்போற் குரைத்தாரென்ற 4-வது குற்றத்தை நிராகரித்தற்பொருட்டெழுந்ததெனக்கொள்க.

## பூர்வ பக்ஷத்தார்.

(10) "தம்முடைய பெயரைச் சொன்னதற்கு இவ்வளவு கோபஞ்செய்தவர் நாவலர் என்ற சொல்லுக்கு அவகுணஅர்த்தம்பண்ணி, நாவலரை நிந்தித்ததும், அதற்கு நாவலர் மஞ்சகுப்பங் கோர்ட்டில் ஜாயிண்டுமாஜிஸ்ட்ரேட் மிஸ்டர். ராபர்ட்

துரையவர்களிடத்தில் வழக்குக் கொண்டுவந்த காலை, நான்போயிருந்த தவணையாகிய (1871) சுக்கில வருடம் மார்கழிமீ இராமலிங்கப்பிள்ளை இராமலிங்கப்பிள்ளை யென்று கோர்ட்டில் பலருமறியக்கூப்பிட்டதற்கு என்னசெய்தார் ''

'' அதில் தம்மை யடித்த பிராமணர்க்கு விதித்த அபராதப் பணத்திற்காகவும், செலவுபணத்திற்காகவும் முட்டுப்பட்டு எமக்குத் தெரிந்த சைவ வேளாளர்களிடம்போய்ப் பணங்கேட்ட காலை, அவர்கள் பொய்சத்தியம் செய்த பிள்ளையே! கணக்கப்பிள்ளையே! என்று பலமுறை நிந்தித்ததற்குங் கூப்பிட்டதற்கும் என்னசெய்தாரென்றேம். '' என்றார்.

## கண்டனம்.

நண்பர்களே! சற்றுக்கவனியுங்கள். சிதம்பரத்திலுள்ளதீக்ஷிதசுவாமிகளை ஆறுமுகநாவலர், தீக்ஷை செய்துக்கொள்ளவேண்டுமென்றும் ஆகமவிதியாய்ப் பூசைசெய்ய வேண்டுமென்றும் கண்டனங்கள்செய்ய ஆரம்பித்தார். தீக்ஷிதர்கள் கோபாவேசங்கொண்டு ஆறுமுகநாவலரை, ஈழநாட்டுச்சாணன் பாணச்சேரிப்பறையன், இவனு எங்களைக் கண்டிப்பதெனப் பலவாறாக வைதனர்கள். பின்னர் இவனுக்கு நாவலரென்றபட்டமென்னை? அதற்குப்பொருளுரைக்கவேண்டுமென இராமலிங்கசுவாமிகளைச்சூழ்ந்துக்கொண்டார்கள். சுவாமிகள்பொருள்சொல்லாவிடின் இவர்கள் விடாரே இதற்கென்செய்வதென அஞ்சி, முன்னர் சிலசுபகுணமான அர்த்தங்களை யெடுத்துச் சொன்னார். அவை எங்களுக்கு வேண்டுவதின்றும், அவகுணார்த்தங்களாகக் கூறவேண்டுமெனத்தீக்ஷிதர்கள்கேட்க, அதற்கான சிலஅவகுணார்த்தங்களை எடுத்துவிரித்தார். இதைக்கேட்டிருந்த நாவலரின்சார்பார் நாவலருக்குச்சொல்ல, நாவலர் தீக்ஷிதர்களையும் இராமலிங்கசுவாமிகளையும் சேர்த்து மஞ்சகுப்பம் கோர்ட்டில் இவர்கள்மேல் அவதூறுகுற்றத்திறகாக வழக்குத்தொடுத்தார். விசாரணைகுறித்தகாலத்தில் கோர்ட்டுக்கு நாவலர் முன்னர்வந்து சேர்ந்தார்; அவர்க்கு அங்குள்ளார் நாற்காலிகொடுத்து இருக்கச்செய்தனர். அக்காலத்தில், இராமலிங்கசுவாமிகள் கோர்ட்டு விசாரணைக்கு வருகிறாரென்று அந்தஜில்லாவிலுள்ள கனவான்களுந் தனவான்களுமாயுள்ள பிரபுக்களும் சிவநேயச்செல்வர்களுமாக கோர்ட்டில்வந்துநிறைந்தனர். கோர்ட்டின்தெருவெங்

கும்ஜனங்கள் வந்து நிறைந்தனர். மாஜிஸ்ட்ரேட்டு துரையவர்கள் வண்டியில்வந்து இறங்குதற்கு இடங்கொடுக்கவில்லை. இதுஎன்ன ஆச்சரியம் இவ்வளவு ஜனங்கள்வந்து கூடுதற்குக் காரணமென்னென அவர் அங்குள்ளாரை வினவினர். வடலூர் இராமலிங்க சுவாமிகள் கோர்ட்டுக்கு வருகின்றாரெனப் பார்க்கவந்திருக்கிறார்களென்றனர். உடனே இராமலிங்கசுவாமிகளும் தமது திருக்கூட்டத்துடன் வண்டியில்வந்திறங்கினர். சிரஸ்தாதார், தாஸில்தார், வக்கீல்கள் நாஜர் முதலானவர்களும் எதிர்கொண்டுபோய் நமஸ்கரித்து சுவாமிகளை வண்டியிலிருந்திறக்கி இட்டுக்கொண்டுவருவதைத்துரைகண்டு ஆச்சரியமுற்று தமது ஆசனத்திற் போயிருந்தனர். சுவாமிகள் வரவைக்கண்ட மாத்திரத்தில் எழுந்து நின்று தொப்பியைக் கழற்றிக்கொண்டு சலாஞ்செய்து அவரை ஓர் தனித்தஅறையில் நாற்காலி கொடுத்து வீற்றிருக்கும்படி உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவுசெய்தனர். அவ்விடத்தில் வேறு நாற்காலி இல்லாமையால் நாவலரை எழுந்துநிற்கச்செய்து அவர் உட்கார்ந்திருந்த நாற்காலியைக்கொண்டுபோய் இராமலிங்கசுவாமிகளுக்கு இடுவித்து வீற்றிருக்கச்செய்தனர். "கோர்ட்டுவிசாரணைகாலத்து (இராமலிங்கப்பிள்ளை இராமலிங்கப்பிள்ளையென்று பலரும் அறியும்படி கூப்பிட்டதற்கு என்னசெய்தார்" என முக்குணவயப்பட்ட உதயமூர்த்திபண்டாரம் கூறியபுழுதவாறு) இவரைக்கோர்ட்டார் கூப்பிட்டதுமில்லை, குற்றவாளிகளிருக்கவேண்டிய ஸ்தானத்தில் கொண்டுவந்து நிறுத்தினதுமில்லை, அவரிடம் வாக்குமூலம வாங்கினது மில்லை. இதைக்கண்ட நாவலரும் இராமலிங்கசுவாமிகளுக்கு நடந்த சிறுஞ்செல்வாக்குங் கண்டு அச்சமும் நாணமுங்கொண்டு நாம் இவர்மீது தெரியாத்தனமாகவழக்கெடுத்துவிட்டோம் என்செய்வதென மனமாழ்கினின்றனர். இவ்விடத்திலெடுத்துக்கொண்டவழக்கு கிறிமினல்கேசு ஆனதால் அவதூறுகுற்றத்தை ருசுப்படுத்தவேண்டியது வாதியின்கடமையேயானதால், கோர்ட்டார் ஆறுமுகநாவலரைநோக்கி முன்னர் தீக்ஷிதர்கள் என்னைசெய்தனர்களென்றார். நாவலர் தம்மை வைதனரெனக்கூறி சாக்ஷிகளையுங்கொண்டு ருசுப்படுத்தினர். தீக்ஷிதர்களும் வைததுண்டென ஒப்புக்கொண்டமையால்அவர்களுக்குகோர்ட்டார் 50-ரூபா அபராதம்விதித்தனர்.

பின்னர் இராமலிங்கப்பிள்ளை என்செய்தாரென ஆறுமுகநாவலரைக்கேட்க, தீக்ஷிதர்கள் ஏவுதலின்பேரில் இவர்நாவலர்என்ற பதத்திற்கு அவகுணார்த்தங்கள்கூறினர் என்றார். கோர்ட்டார் இவர்கூறிய அவகுணார்த்தங்கள் ஆறுமுகநாவலர் என்ற வாக்கியத்திற்காகவா அல்லது நாவலரென்ற வாக்கியத்திற்காகவாவெனமறுத்துக்கேட்டார்கள். அதற்கு நாவலர், நாவலர் என்றசொல்லுக்கேயென்றார். அதற்குக்கோர்ட்டார் நாவலர்என்றசொல் பொது வாக்கியமானதால் அதற்கு சுபகுணமாகவேனும் அவகுணமாகவேனும் பொருளுரைத்தல்அவதூறுகுற்றமாகாதெனச்சுவாமிகளை யாதொருவாக்கு மூலமுங்கேளாது விடுதலைசெய்தார்கள். இதுவிஷயம் இங்ஙனமிருக்க, நாவலர் கக்ஷியார் சிலர் இராமலிங்கப்பிள்ளை கோர்ட்டில் வந்தகாலத்தில் அங்குள்ளார் சிலர்கூடி நீர் ஆறுமுகநாவலரை இவ்வாறு இழிவுகூறலாமாவெனக்கேட்டதாகவும், அதற்கவர், அப்பணை சாமியாணை நான் அவ்வாறுகூறவில்லையென்று பொய்மை சொன்னதாகவும், அம்மட்டேபோதுமென நாவலர் இராமலிங்கப்பிள்ளையை கேஸில் நின்றும்நீக்கிக்கொண்டாரென்றும் கூறுகின்றார்கள். வேறுசிலர் அங்ஙனமன்று, தீக்ஷிதர்கள் நாவலரை வைததுண்டாவென இராமலிங்கசாமியைக்கோர்ட்டார்கேட்டதாகவும், அதற்கவர் நான் அவ்விடத்திலிருந்ததில்லை அவரை வையக்கேட்டதுமில்லையெனப் பொய்சத்தியஞ்செய்தாரெனக் கூறுகிறார்கள். குற்றவாளியாகக் கொண்டுவரப்பட்டவரிடம் கோர்ட்டார் சாக்ஷிக் கேட்பதுண்டோ? இராமலிங்கசுவாமியை ஆறுமுக நாவலர் குற்றவாளி ஜாபித்தாவிலிருந்து தாமேநீக்கிவிட்டார் என்பதும் பொய்மையே, கோர்ட்டார் இவரை சாக்ஷி கேட்டாரென்பதும் பொய்மையேயாம்.

நடந்தவுண்மை இவ்வாறாகவிருக்க, நாவலர்சார்பார் இராமலிங்கப்பிள்ளை பொய்சத்தியஞ் செய்தாரெனப் பறையடித்து உலகோரை மயங்கச்செய்கிறார்கள். அந்தோ இவர் பாவமிருந்தூழியென்னே.

ஆறுமுகநாவலராவது தமது சரித்திரத்தில் இராமலிங்கப்பிள்ளை கோர்ட்டில் பொய்சத்தியஞ் செய்தாரெனக் கூறியுளாரா? அங்ஙனமில்லாதிருக்க சென்னை போலீஸ் கோர்ட்

டார்முன்பாக, இராமலிங்கப்பிள்ளை பொய்சத்தியஞ் செய்தாரெனக்கூறினவர்களே, பொய்சத்தியஞ்செய்தவர்களாவாரன்றி, இராமலிங்கசுவாமிகள் பொய்சத்தியஞ் செய்தவராகார். கொடுமை கொடுமை !

ஆறுமுகநாவலர் இராமலிங்கசுவாமியை எவ்விதத்தும் தண்டிக்கவேண்டுமென கோர்ட்டில் கொண்டுவந்த காலத்து, இராமலிங்கப்பிள்ளை தாம் அவ்வாறு சொன்னதின்றெனப் பொய்மைகூறினுரெனினும், சாக்ஷிகளைக்கொண்டு ருசுப்படுத்தி தண்டித்தொழிப்பாமேயன்றி இவரைக்குற்றவாளிஜாபிதாவில் நீக்கவேண்டியகாரணமென்னையோ? ஒருகால் நாவலர் தயாமூர்த்தியாதலால் இராமலிங்கப்பிள்ளையிடதது இரக்கமுற்று விடுதலைசெய்தாரெனக் கொள்ளலாகாதோவெனின்? இந்நாவலர் தாம்செய்த பற்பல பிரசங்கங்களிலும் நடராஜப்பெருமான் கைலையினின்றும் சிதம்பரத்தில் எழுந்தருளிவந்த காலத்தில் தீக்ஷிதசுவாமிகளெல்லாம் அவருடன்கூட வந்தவர்களென்றும், அவர்கள்வேறு சுவாமிவேறெனக்கூறலாகாது, தில்லை மூவாயிரவருள்நடராஜரப்பெருமானும் ஒருவராயிருத்தலின், அவரே இவர்கள், இவர்களேஅவர் எனச்சமத்துவங்கூறிப் புகழ்ந்திருந்தும், அதைமறந்து தீக்ஷிதர்களை தம்மை வைதார்களெனக் கோர்ட்டில் கொண்டுபோய்நிறுத்தி அபராதம்போடச் செய்வித்தனரே. இவர்தாமோசைவர்! இவர்தாமோ இராமலிங்கப்பிள்ளை யிடத்தில் இரக்கம்வைத்து விடுதலை செய்தவராவார்! இலங்கையிற் பிறந்தார்க்கு இரக்கமென்ப தெவ்வாறுண்டாகும்.

பின்னும் சென்னைப்பிரசிடெண்ஸி மாஜிஸ்ட்ரேட்டுகோர்ட்டில கதிரைவேற்பிள்ளை பக்ஷத்தில் சான்றுகூறவந்த உபாத்தியாயர் இராமலிங்கப்பிள்ளையும் வைத்திலிங்கப் பிள்ளையுமே நடேச தீக்ஷிதர்என்பவர் நாவலர் என்றபதத்திற்கு இராமலிங்கசுவாமிகளை அவகுணர்த்தங்கூறும்படி செய்வித்தாரெனச் சான்றுகூறியிருக்கிறார்கள். அதனுனே அபராதம்விதித்தமை தீக்ஷிதர்களுக்கேயன்றி இராமலிங்கசுவாமியைச்சேர்ந்த வேறுபிராமணர்களுக்கின்றும். அத்தீக்ஷிதர்கள் இந்தவழக்கைப்பற்றி கோயில் பொதுப்பணத்திலிருந்து செலவிட்டதேயன்றி வேறின்றும். அப்பொதுப்பணம் இவ்வித செலவுக்காகவே தீக்ஷிதர்க

ளால் சேர்க்கப்பட்டுள்ள பணமாம். அது இக்காலத்தும் அபரிமிதமாய்க் குவிந்துகிடக்கின்றது. இவ்விதமாகவே கோர்ட்டில் ஏதேனும் நடவடிக்கைகள் ஏற்படும் பக்ஷத்தில் ஒருவரைப் போய்ப்பணம்வேண்டுமென யாசிக்கவேண்டுவதின்றாம். இவர்சில சைவரைப்போய்ப் பணம் கேட்டாரென்பதும், அதற்கவர்கள் பொய் சத்தியம்செய்தபிள்ளையே கணக்கப்பிள்ளையாம் என நிந்தித்தாரென்பதும், உண்மையாகவாம். தாதுள்ளத்துள்ள அழுக்காற்றை வெளிப்படுத்தியதெனக்கொள்க.

10-வது பிரிவிலுள்ள இக்கட்டுக்கதை இராமலிங்கப்பிள்ளை மஞ்சகுப்பம் கோர்ட்டில் பொய்சத்தியஞ்செய்தாரென்னும் 6-வது அவதூறு குற்றத்தை நிராகரித்தற்பொருட்டெழுந்ததெனக்கொள்க.

## பூர்வ பக்ஷத்தார்.

(11) "இவற்றைச் சொல்லவே பிள்ளையவர்கள் அஞ்சலிசெய்து அங்ஙனஞ்சொல்ல வேண்டாம்என்றுவேண்டிக்கொண்டனர்; இதனாலே இவர் குணம் மாறிச்சொல்வோரென்பது தெரிந்தது" என்றார்.

## கண்டனம்.

இவர் வாக்கியங்கள் அளவுகடந்தபொய்மையேயாம். இக்கட்டுவாக்கியம். "முக்குணவயத்தின்முறை மறைந்தறைதல்" எனத்தமது பத்திரிகைக்கு பெயர்தந்தமையை நிறுவுதற்காக வெழுந்ததெனக் கொள்க.

## பூர்வ பக்ஷத்தார்.

(12) "பின்னர்பிள்ளை அவர்களைப்பார்த்து சுவாமிகாள்! இறந்தவர் உயிர்பெற்றெழுதல் மூப்பினர் இளமையைப்பெற்று நிற்றல் முதலிய அற்புதங்களைச்செய்வே மென்று விளம்பரமிட்டீரே" முதலிய என்றதனால் குறிக்கப்படும் மற்றைய அற்புதங்களெவையென்று கேட்டேம். அதற்கு இராமலிங்கப்பிள்ளையவர்கள் சொன்னதாவது பிள்ளையில்லாதவர்க்கு அது பெறுவித்தல், கை, கால், கண், இவையில்லாதவர்க்கு அவை கொடுத்தல், பொன் இல்லாதவர்க்குப் பொன்செய்து கொடுத்தல்; நோய்நீக்கல் முதலாயின என்றார். அவைகளுள் ஏதேனும்யார்க்காவது செய்ததுண்டா வென்று கேட்டேம். இனிமேல் நடக்கும் என்றார். எப்போதுஎன்று கேட்டேம். இரண்டரைநாழி

கைக்குள் என்றார். அதுவரைக்கு மிருந்து நடக்கவில்லையே யென்றேம். தேவநாழிகையன்றி மானுடநாழிகையல்ல என்று பின்னர் உத்தரமீந்தார். அங்கு நம்பிப்பலநாட் காத்திருந்தவர்கள் சொல்வனவெல்லாம் புளுகு என்று வைதுபோயினர்" என்றார்.

## கண்டனம்.

இவற்றை இராமலிங்கசுவாமிகள் சொன்னாரென்பது முற்றும்பொய்மைபாம். அவரைப்பபிந்திபக்காரனுக்கு நிமித்தம் பொறாமை மிகுதியால் எழுதிவிடுத்த கற்பனுவிஷயமாம்.

1-3-12-வது பிரிவுகளில் கூறிய இக்கட்டுக்கதைகள் இராமலிங்கப்பிள்ளை கம்முடைய புளுகுகளெல்லாம் நடககாமையால் அனேகர் வைதனர்என்னும் முதலாவது அவதூறு குற்றத்தை நிராகரித்தற்பொருட்டெழுந்தனக்கொள்க.

## பூர்வ பக்ஷத்தார்.

(13) " உடையார் பாளையம் என்னும் ரெட்டிப்பாளையத்துப்பெண்கள் பருடவரங்கேட்க அவர்களுக்கு இராமலிங்கப்பிள்ளை பிள்ளைவரங் கொடுத்ததுபோலத் திருத்துறைப்பூண்டியினின்றும் போயவளுக்கும் பிள்ளைவரங் கொடுக்கப்பட்டமையால் ஆகுலித்துத்திரும்பினேம்" என்றார்.

## கண்டனம்.

ஈண்டு உடையார் பாளையம் எனவரௌா கூறுது. "உடையார் பாளையம் என்னும ரெட்டிப்பாளையம்" எனக்கூறியதென்னை எனின், சென்னை போலீசு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டார் சாட்சிக்காக வந்திருந்த வடலூர் கிராமமுன்சீப்பு புருஷோத்தமரெட்டியாரை ரெட்டிப்பாளைத்திலிருந்த ஒருபணக்காரரிடஞ்சென்று அவர் பகைவரைச்சூனியஞ்செய்து கொன்றுவிடுகிறேனென்று இராமலிங்கப்பிள்ளை 1000 ரூபா தங்கங்கக்காசு வாங்கினாரெனக் கூறுகின்றார்களே வடலூர் கருங்குழி கிராமங்களுக்கு அருகில் ரெட்டிப்பாளைய மென்ற ஓர் ஊர் உண்டாவெனக்கேட்க, அதற்கவர் அப்பெயர் கொண்ட ஊர் அப்பங்களில் இல்லையெனக்கூறினர். அந்த ரெட்டிப்பாளையம் என்ற வூர்பொய்மையாகா வண்ணம் நிறுவுதற் பொருட்டு

உடையார் பாளையம் என்னும் இரெட்டிப்பாளையம் என ஈண்டுப்புரட்டிக்கூறினர். உடையார்பாளையத்திற்கு எக்காலத்தும் ரெட்டிப்பாளையம் என்ற பெயர் வழங்கினதில்லை எனக் கொள்க.

உதயமூர்த்தி தேசிகர் தமது சீடன் மனைவி பிள்ளைவரம் பெறாமைகண்டு ஆகுலித்துத் திரும்பினோம் என்றமையால் பிள்ளை வாங்கினமை வெளிப்படுதற்கு, சுமார் 6மீ° காலமாகுமே, அதுவரையினுமா இப்பண்டாரம் வடலூரிலிருந்தனர். இவ் வண்டப்புளுகை யாவரே நம்புவர்.

இக்கட்டுக்கதை உடையார்பாளையமே ரெட்டிப்பாளையம் என்றும், இராமலிங்கப்பிள்ளை அறுதலிப்பெண்களை யெல்லாம் கற்பழித்தாரென்றும், அவர்களெல்லாம் இவரிடம் பிள்ளை வாங்கிக்கொண்டாரென்றுங் கூறியதைப்பரிகரித்தற் பொருட்டெழுந்ததா மெனக்கொள்க.

## பூர்வ பக்ஷத்தார்.

14. அன்பர்களே! பிள்ளையில்லாதவர்க்குப் பிள்ளைவரங்கொடுத்தலாகிய அற்புதத்தை மாத்திரம் பிள்ளையவர்கள் செய்கிறார். பெண்ணோய்க்காக இரசஞ்சேர்ந்த மருந்தினைப்பரிகாரி **கந்தப் பிள்ளையவர்களிடம்** வாங்கியுண்டு அதன் வேகத்தால் விழுந்த தமது பற்களை முளைப்பிக்க பண்ணுதவர் செத்தாரை எழுப்பல் நோய் நீக்கல் கைகால கண் இவைகளைப் பிறர்க்குக்கொடுத்தல் எப்படி?

## கண்டனம்.

இராமலிங்கசுவாமிகளைத்திருவருட்பிரகாசவள்ளலாரென அழைக்கச்சகியாத உதயமூர்த்திசுவாமிகளோ, பலர்க்கும்மயிர் கழிக்கும்படியான கேவலம் அம்பட்ட ஜாதியாளுயுள்ள பரிகாரியைக், கந்தனென்னுது "**கந்தப்பிள்ளை அவர்கள்**" என்று மனந்துணிந்து எழுதுவர்? இது ஜாதிபேதங்களின் பெருமை சிறுமையறியாத ஈழநாட்டாரே எழுதியதெனக்கொள்க.

இராமலிங்க சுவாமிகள் பெண்ணுசை யுள்ளாரெனின் தான் தாம்கொண்டமனைவியைத் துறந்தார். அனேகர் தம்மனை

வியைவிடுத்துப் பிறமனைவிருப்பமுடையரா இருத்தலில்லையோ? அதுபோலாகாதோவெனின்? அவ்விருப்பமுடையார் அதற்குத் தக்ககட்டடங்களைக் கட்டிக்கொண்டிருத்தல்வேண்டும். அங்ஙனமில்லாது ஒருவரும் நாடுதற்கரிய அண்டகிழலில்லாத வடலூர்ப் பெருவெளியில்ஓர்சிறுகுடிலில் இவர்தனித்திருக்கக்கணக்கில்லை. பின்னும்,பெண்போகவிருப்புடையார்அதற்குத்தக்கவுணவுயேற்றிருக்கவேண்டும். அங்ஙனமில்லாது ஊணுறக்கமற்று தேகம் மெலிந்துள்ள தபசியைப்பெண்ணேய்வாங்கிக்கொண்டு இரசஞ் சேர்ந்தமருந்து தின்று பறகளிழந்தாரென்பது ஒருவரும் நம்பத் தக்கதன்றாம். இஃது, கழக்கிருஷ்தவக்கொள்கைப் போலிச் சைவரியல்பாம்.

இராமலிங்க சுவாமிகள் மறைந்தநாள்வரையில் அவரது தந்தவரிசைகள் முல்லையரும்பினைப்போற் பிரகாசித்து விளங்கினமை யாவரே அறியாதார். இவ்வித ஜகஜாலப்புளுகர் வேறு என்னதான் புளுகார்! இவர்கள் துணிபே துணிபு?

13-14-வது பிரிவுகளிலுள்ளஇக்கட்டுக்கதைகள் இராமலிங்கப்பிள்ளை பூப்புப்பெண்களைப்புணர்ந்து பெண்ணேயால் இரசஞ்சேர்ந்தமருந்துண்டு பல்லிழந்தாரென்ற 7-வது அவதூறுகுற்றத்தை ஸ்தாபித்தற் பொருட்டெழுந்ததெனக்கொள்க.

## பூர்வ பக்ஷத்தார்.

" இரசவாதஞ் செய்கிறாரென்று மயங்காதீர். உடையார் பாளையத்தில் ஒருவரைச் சூனியஞ்செய்து கொலைசெய்வேனென்று வாக்குதத்தம்பண்ணி ஐயின்தாரிடம்வாங்கிய தங்கக்காசுகளைக் கடிதத்திற் சுருட்டிச் செம்புருகச்செய்வார்போல் உருக்குவித்து மருந்தென்று விபூதியைத் தூவிச் செம்புபொன்னாயிற்றென்று காட்டிவருகின்ற கபடநாடகக் கூத்தன்றி வேறில்லை. பணங்கொடுத்தவரிறந்தது பிள்ளையின்நற்காலமே" என்றார்.

## கண்டனம்.

இராமலிங்கசுவாமிகள் வடலூரேகாமுன்னர் அங்குள்ள இரெட்டியர், வன்னியர், மீனவர்,வலைஞர் முதலிய அபக்தபோஜனக்காரர்களெல்லாம் சுவாமிகள் வந்தபின்னர் கற்றுக்காதவழிக்குக்காதவழிதூரம் கொலைபுலை யொழிந்து சுத்தபோஜனக் காரராகி விட்டமையும், அவ்விடத்து பார்க்கவந்த துருக்க

ரெல்லாம் ஆச்சரியங்கொண்டு இவன் தேவடியாள்மகனேயென நிச்சயித்துக் கொண்டார்கள். அதுபோல "முக்குணவயத்தின் முறைமறைந்தறைதல்" என்னும் இப்பத்திரிகை இக்காலத்த தன்று, முற்காலத்தது, என அளவுகடந்த சாக்ஷிகளைக்கொண்டும், பத்திரிகை மூலமாயும் வெளிப்படுத்தினதினால், இது முற்காலத்தது தன்று, இக்காலத்து வெளியிடப்பட்டதே என யாவர்க்கும் நன்கு விளக்குகின்றது. ஆச்சரியம்.

தேவாரம் முத்துச்சாமிமுதலியார் சாதிப்புரட்டர் யாவர்', என்ற பத்திரிகையை அச்சிட்டு வெளிப்படுத்தினர் எனக் கோர்ட்டில் தாக்கல் செய்தனரே. அதற்கு ஏன் சாக்ஷிகளைக் கொண்டு ருசுப்படுத்தவில்லை. மெய்மைக்குச்சாக்ஷி வேண்டுவதின்றெனவிடுத்தனரோ? முக்குணவயத்தின் முறைமறந்தறை தல் என்ற இப்பத்திரிகை, அக்காலத்தே தோன்றியதென்பது நா. கதிரைவேற்பிள்ளை தமது மனசாக்ஷிக்கு விரோதமாயிருத்தலினாலன்றோ இவ்வாறு சான்று கூறிவைத்தனர்.

இதனால் இப்பத்திரிகை உமாபதி தேசிகசுவாமிகளால் எழுதப்பட்டதுமன்று; அது 1872-ஆல் வெளிவந்ததுமன்று. இது சில பொய்மைக்களஞ்சிய வீழ்ப்புலவர் சிகாமணிகள் இக்காலத்தில் எழுதிவிடுத்த வஞ்சகவாசக மாமன்றி உண்மையில் நடந்ததறிவிக்கும் பத்திரிகையன்றாம்.

இது நிற்க, சென்னைமாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டில் நா. கதிரைவேற்பிள்ளை அத்தாக்ஷி பத்திரங்களாகத் தாக்கல்செய்த "இராமலிங்கப்பிள்ளை படிற்றொழுக்கம்" என்றபத்திரிகையும், இராமலிங்கபிள்ளை யவர்கள் தமயன் சபாபதிப்பிள்ளை யவர்களால் செய்ததென்ற "அங்கதப்பாட்டும்" வாசித்துப்பார்த்தால் முற்றும் பொய்மையாமெனவிளங்கும். "தத்துவபோதினி" என்றபத்திரிகை, கடவுளில்லை, ஆன்மாவில்லை, மோக்ஷமில்லை, நரகமில்லை என்று கூறும் அநீசுரவாதப் பத்திரிகையாதலின் அதில் இராமலிங்கசுவாமிகள் முதலிய பெரியோரை நிந்தைகூறல் அதிசயமன்றாம். நிரீச்சுரவாதிகலியல்பாம்.

போலீஸ் மாஜிஸ்ட்ரெட்டு கோர்ட்டார் இவ்வித அத்தாக்ஷி, தஸ்தாவேசுகளைப் பிரமாணமாக எடுத்துக்கொள்ளாமல்

தேதங்களுக்குக் கிடைத்திருந்ததென, நா. குதிரைவேற்பிள்ளை அடியிற்கண்ட எண்மர்களால் கோர்ட்டில் சான்று கூறுவித்தமை மிக அதிசயிக்கத்தக்கதேயாம்.

## சாக்ஷிகள்.

1. ஈழநாட்டுச் செந்தில் நாதையர், 2. ஈழநாட்டு ஆறுமுகநாவலர்மாணாக்கர் தணிகாசலமுதலியார், 3. வன்னியகுரு பார்த்தசாரதிராயர், 4. நாராயணசாமிநாயுடு, 5. பாலூர் முருகேசமுதலியார், 6. சபாபதிமுதலியார், 7. அயனவரம் துரைசாமிப்பிள்ளை, 8. சிதம்பரமுதலியார்.

இப்பத்திரிகை அக்காலத்தே உதயமூர்த்தி சுவாமிகளால் வெளியிடப்பட்டிருந்த துண்மையாயின், இதற்கு இத்தனைபேர் சாக்ஷிகளும்வேண்டுமோ? இவர்களைக்கொண்டு சான்று கூறுவித்ததும் அதிசயமன்றாம். பொய்புகலா நாவுடையாரென்னும் பெயர்பெற்றுள்ள நாட்டுக்கோட்டை செட்டிமார்களுள் ஒருவரைக்கொண்டு மதுரைமீனாக்ஷி அச்சாபீஸிலிருந்து "முக்குணவயத்தின் முறைமறந்தறைதல்" என்று மிப்பத்திரிகை அச்சிட்டு வெளிப்படுத்தினதுமன்றி, அதனடியில் இப்பத்திரிகை 1872 ௵-ல் உதயமூர்த்திதேசிக சுவாமிகளால் அச்சிடப்பட்டதென்றும், அப்பழையபத்திரிகை இக்காலத்தும் தம்மிடத்து பலவுளவென்றும் விளக்கியிருத்தலும், நகரத்தாரென அப்பத்திரிகையில் கையொப்பம் வைத்திருத்தலும் அதிசயிக்கத்தக்கதேயாம். சிலநகரத்தார்களிணக்கியது கலிநாலனைப்பவும்.

இதை யோசிக்குமிடத்தில், அரசனிடத்தில் அணுக்கத்தொண்டுபுரிந்துவந்த ஒருசேவகனை வேறொருவன் தேவடியாள்மகனேயெனவையவும், அதைக்கேட்டசேவகன் அரசனிடத்தில் இன்னான் என்னை இவ்விதமாகவைதான், அதனால்எனக்கு அதிக அவமானமாயிருக்கிறதென்றான். அதற்குஎன்னசெய்யவேண்டுமென்று அரசன்வினவ, நான்தேவடியாள்மகனன்றென பறையறைவிக்கவேண்டுமென்றான். உடனே இச்சேவகனை ஓர் குதிரையின்மேலேற்றி ஊர் வலம்வரும்படி செய்து அவனுக்குமுன்பாக இக்குதிரையின்மேல்வருகிறவர் தேவடியாள் மகன் அன்றென பறையடித்துக் கொண்டுபோனான். இதைக் கேட்டோ

ஐரோப்பியர்களும் மாமிசபக்ஷணம் உண்ணக்கிடையாது சுத்த போஜனஞ் செய்துவந்தமையும் யாவரேஅறியாதார். அங்ஙனம் கொல்லாவிரதம்பூண்டிருந்த இராமலிங்கசுவாமிகள் ஒருவரைச் சூனியஞ்செய்து கொல்வேமென ஜமீன்தாரிடம் 1000 ரூபா. தங்கக்காசு வாங்கிக் கொண்டாரென்ற வஞ்சக வாக்கியங்களை யாவரே நம்புவர். இவ்வித ஜகஜாலப் புரட்டு எங்கேனுமுண்டா? 10, 20 ரூபா. பெற்றுககொண்டு சூனியஞ்செய்துகொல்லுங் கர்மிகள் உலகில் அனேகரிருக்க, அவர்களை யெல்லாம் விடுத்து, இராமலிங்கசுவாமிகள் இத்தன்மையரெனவறியாது,அவரிடம் ஜமீன்தார் இப்பெருந்தொகையைக் கொடுத்ததும், அவர் அவ்வாறுசெய்துமுடிப்பேமென அப்பணத்தைவாங்கிக்கொண்டதும்பெரும்ஆச்சரியமேயாம். இப்படி 1000-ரூபாயைமொத்தமாகக்கொடுத்திழந்த ஜமீன்தாரர் யாவர்? அவர்பெயரென்னை? அவர்யாவரைக்கொல்லச்சொன்னார்? "வெட்கமுங்கெட்டுவெளிவந்தமுண்டைக்கிமுக்காட்டேதுக்கடி" என்றபடி இராமலிங்கப்பிள்ளை மோசக்காரரென அவர் மூட்டையை வெளியே அவிழ்த்துக்கொட்டிய இவர் இவையெல்லாம் உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் ஏன்விபரமாய்ச்சொல்லியமுறாதொழிந்தார்? அதனால் இவை ஒன்றும் உண்மையாகாவாம். இவைகளைக் கவனிப்பீர்களாக.

பின்னுந்தங்கக்காசுகளைக் கடிதத்திற் சுருட்டிச்செம்புருக்குவோர் போல உருக்குவித்து மருந்தென விபூதியைத்தூவி இரும்பு பொன்னாயிற் றென்று கபட நாடகஞ்செய்த இவரை உதயமூர்த்திசுவாமிகள் இராமலிங்க சுவாமியைப்பொன்செய்கவெனச்சொல்லி அவர் பொய்மையைப் பலரும் அறியும்படியேன் வெளிப்படுத்தினாரில்லை? அவ்வாறு செய்யாதுவிடுத்து இப்போது அவர்மீது பலவாறாகப் பொய்மைகூறித் தூற்றுபவரன்றோ கபடநாடகக் கூத்தராவார். ஆச்சரியம்.

3-15 பிரிவுகளிற்கூறிய இக்கட்டுக்கதைகள் இராமலிங்கப்பிள்ளை சூனியஞ்செய்வதாய்ப் பணம்வாங்கி மோசஞ் செய்தார், இரசவாதஞ்செய்கிறேனென்று மோசஞ்செய்தாரென்ற 3-வது அவதூறுகுற்றத்தை நிராகரித்தற் பொருட்டெழுந்த தெனக்கொள்க.

## பூர்வ பக்ஷத்தார்.

(16) "இவைகளெல்லாம் நேரிற்பார்த்துணர்ந்தன் பயப்படாது எழுதினமையன்றி வேறோர் கோபத்தாலன்றென்று" கூறியெழுதார்.

## கண்டனம்.

இராமலிங்கசுவாமி பிறந்தது முதல் மறைந்ததீறாகவுள்ள இவர் சரித்திர முழுதும் ஜீவான்மாவோடு பரமான்மா உடனிருந்தறிந்தது போல இவர் சரித்திரமுழுதும் தான் கண்டதாகவும் உலகிலுள்ள தீமைகளையெல்லாம சுவாமிகளே செய்தாரெனவும் கற்பித்து ஓர் அவலச்சுவடியை யெழுதி விடுத்து அதற்கு "முகக்குணவயத்தின் முறை மீறந்தறைதல்என நாமகரணஞ் சூட்டி வெளியிட்ட இவரது ஜகஜாலப்புரட்டுக்கு மற்றோர் புரட்டுமுண்டோ?

இதுகோபத்தாலெழுதிய தன்றெனச் சித்த சமாதானமுங் கூறித்தொலைத்தார். சித்தசமாதானத்துடன் எழுதியதே இவ்வாறாயின், இவர்கோபத்தோடெழுதியிருப்பின் முன்காலத்திலே திரிபுரித்தகனமானது போலத் தகித்துப்போயிருக்குமெனத் தோன்றுகின்றது.

ஆறுமுகநாவலர் தமது யாழ்ப்பாணச் சமயநிலை 22-பிரிவில் பொய் வழக்குப்பேசுதல், பொய்ப்பிரமாணம்பண்ணுதல், பொய்ப்பத்திரம் படைத்தல், சாராயங்குடித்தல், அக்கை தங்கை, மாமி, மருமகள், பேர்த்தி என்கிற வரம்பு முறைகடந்து கல்யாணஞ் செய்தல், கடவுளில்லை ஆன்மாவில்லை மோக்ஷ நரகமில்லை யென்று வாதித்தல், பாம்புக்குத்தலை காட்டி மீனுக்கு வால் காட்டும் மலங்குபோலச் சைவருக்குச் சைவராயும் கிறிஸ்தவருக்குக் கிறிஸ்தவராயும் நடித்தல் முதலிய இப்பெருங் கொடுந்தீமைகளெல்லாம் இவ்வியாழ்ப்பாணத்திலே வரவரத் தலைப்பட்டோங்குகின்றன. எனக்கூறியிருப்பதற்குச் சான்றாக விம்முக்குணப்பத்திரிகை இப்போது வெளிவந்திருக்கிறது.

## பூர்வ பக்ஷத்தார்.

(17) "தகனஞ்செய்தல், உத்தரகிரியை சிரார்த்தம் முதலியன செய்தல் கூடாதென்கிறார். அவை வேதசிவாகம விதியென்

றேம். வேதசிவாகமங்களைக் குப்பையிலெறி, அவை பயனில்லை யென்று நிந்தித்த இவர் சைவரா? அருள் பெற்றவரா? இவரை உலகாயதரென்றே கொள்ளவேண்டும், இவர் சொற்களைப பித்தப்பிதற்றென்றே கொள்க" என்று முடித்தார்.

## கண்டனம்.

இராமலிங்க சுவாமிகள் அவ்வாறு கூறினாரெனக்கொளினும், பன்னிரு திருமுறைகளில்,

வேதமோதிலென் சாத்திரங்கேட்கிலென்
நீதிநூல்பலநித்தநல் பயிற்றிலென்
ஓதியங்கமோராறு முணரிலென்
ஈசனையுள்குவார்க்கன்றி யில்லையே.

என அப்பர் சுவாமிகள் வேதாகமங்களை ஓதலாற் பயனில்லை யென்றுகூறினாரென்றாம்,

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே
மாற்றிப்பிறக்கவகை யறிந்தாயில்லை மாமறைநூல்
ஏற்றிக்கிடக்கு மெழுகோடி மந்திரமென்ன கண்டா
யாற்றிற்கிடந்து துறையறியாம லலைகின்றதே.

சிவசின்னங்களாயுள்ள விபூதிருத்திராக்கங்களையும் வேதசிவாகமங்களிலுள்ள பஞ்சாக்ஷரமுதலிய எழுகோடி மகாமந்திரங்களையும் பயனிலவெனப் பட்டினத்தடிகள் கூறினாரென்றும்,

சாத்திரமோதுஞ் சதிர்களை விட்டுநீர்
மாத்திரைப்போது மதித்துள்ளே நோக்குமின்

வேதசிவாகமங்களை ஓதல பயனிலவென விட்டுவிடும்படி திருமூலநாயனார் கூறினாரெனவும், அதனால் இவர்கள் சைவர்கள் அல்லரெனவும், இவர்கள் உலகாயத மதத்தரெனவும் அவர்களுரைபித்தப்பிதற்றென்றே சித்தாந்தப் படுத்துவாரிவ்யாழ்ப்பாணி போலும்.

பின்னும் இறந்தார்க்குத் தகனகிரியைசெயவதே வேதாகமவிதியெனவும், சமாதிக்கிரியை வேதாகம விரோதமெனவும், இவர் சித்தாந்தப்படுத்துவராயின், திருமூலதேவர், குமரகுரு சுவாமிகள், சந்தானசமயாசாரியர்கள் இவர்கள்தேகம்எவ்வாறு மறைந்தன. இவர்களுக்கு தகனகிரியை சஞ்சயனம், உத்திர கிரியை சிரார்த்தம் முதலியவை செய்தவர் யாவர்? அவர்கள்

சமாதி இக்காலத்தும் பூசிக்கப்பட்டுவருவதை யாவரே அறியாதார். சமாதிக்கிரியைசெய்யும் திருவாவடுதுறை தருமபுர ஆதீனத்தார்களும் வேதசிவாகம விரோதிகள்தாமோ? அங்ஙனம் விரோதமே எனக்கொளின் அவர்களை இவர்ஏன் கண்டித்திலர். இராமலிங்கசுவாமிதானா இவருக்கு அகப்பட்டார்? இவர் இவ்வாறு இராமலிங்கசாமியை நிந்திக்க ஏற்பட்டுச் சிவனடியார்களைத் தூஷித்த மாபாதகராகின்றாரன்றோ.

இதுநிற்க, இறந்தாரைப் புதைக்கவேண்டுமென்பது சிலர் சித்தாந்தம், தகனஞ் செய்யவேண்டுமென்பது சிலர் சித்தாந்தம். சிவதீக்ஷைசெய்யப்பெற்ற சைவர்களைத் தகனஞ்செய்யும் பக்ஷத்தில் சிவதீக்ஷைவிடுவித்தே தகனம் செய்யவேண்டும். சமாதிக்கிரியைக்கு அது வேண்டுவதில்லை. இவ்விரண்டு கிரியைகளுள்ளும் புதைக்கவேண்டுமென்பதைக் கைக்கொண்டவர்கள் இராமலிங்கப்பிள்ளைச் சார்பார். அதனால் வடலூரிலிருந்திறந்தவர்கள்எல்லாம் புதைக்கப்பட்டே வந்திருக்கிறார்கள். பிறவிடங்களிலுள்ள பிரேதங்கள் வடலூரில் கொண்டுவந்து புதைப்பதில்லை. இதன் உண்மை அவ்வூரில் கிராமமுனிசிப்பாயுள்ள புருஷோத்தமரெட்டியாரையும் மற்றவரையும்விசாரித்தால தெரியவரும். அன்றியும் திருத்துறைப்பூண்டியிலிருந்து பிரேதம் அவ்வூரில் கொண்டுவந்து புதைத்திலரென்றும், உதயமூர்த்தி தேசிகரென்பவர் அவ்வூரில் வந்திலரென்றும் உறுதி கூறுகின்றார்கள். பின்னும் இந்த மூகருணவயத்தின் முறைமறைந்தறைதல் என்ற பத்திரிகை "உலகர் துன்பப்படாதிருக்க எழுதினோம்" என்று எழுதியிருப்பதால், அக்காலத்தே வடலூரில் இராமலிங்கசுவாமிகளிடத்தில் நம்பிக்கைவைத்துசூழ்ந்திருந்தாரெல்லோருக்கும் அப்பத்திரிகைவழங்கியிருக்கவேண்டுமே. அவர்மகிமை வழங்காதபுறநாட்டில் வழங்கப்பட்டதென்பது எவ்வாறு நம்பத்தக்கது?

அதனால் இப்பத்திரிகை 1872ல் உதயமூர்த்தி சுவாமிகளால் எழுதி வெளியிடப்பட்டதென்பது உண்மையாகாது.

இப்பொய்மைப் பத்திரிகை உண்மையாமெனக் கோர்ட்டார் நம்பும் வண்ணம் இக்காலத்துண்டான இதை அக்காலத்

## போலீசார் தீர்ப்பு

வாதி வடிவேலுப்பிள்ளைக்கும் குற்றவாளி, நா. கதிரைவேற்பிள்ளைக்கும் விரோதமின்மையானும், செத்தாரைத் தூஷித்தல் அவதூறுகுற்றமாகாமையானும் நா. கதிரைவேற்பிள்ளை பூ.பாலசுந்தரநாய்க்கர் ஆக இவ்விருவர்களையும் விடுதலை செய்தோம்" என்றார்.

பின்னும்வடிவேலுப்பிள்ளை இத்தீவினையாளர்செய்தகொடுமைக்கும், போலீசு மாஜிஸ்திரேட்டார் செய்த தீர்ப்புக்கும் மனம் பொறுதவராய், கலிகாலக்கொடுமை யிதுதானோ வென மனமாழ்கி, ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் சுப்பிரமணியஐய்யர், ஜஸ்டிஸ் சங்கரநாயர் ஆகிய இவர்கள் முன்பாக, பாரிஸ்டர் ஜான் ஆடம்துரையைக் கொண்டுமனு செய்யலாயினர். அம்மனுவின் விபரம்.

ஹைகோர்ட்டு காலண்டர்,
1905-ஹு த்திய 143-வது ெந.

சென்னை பிளாக்டவுன் பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட்டாருடைய 1904-ஹு நவம்பர்மீ 21ௗ உத்தரவை, கனம் பொருந்திய கோர்ட்டாரவர்கள், அடியிற் கண்ட காரணங்களால் மேல் விசாரணை செய்து, ரத்துசெய்யும்படி மனுதாரர் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

1. மாஜிஸ்திரேட்டார்தீர்மானம் இந்நுலாவிற்கு விரோதமாக இருக்கின்றது.

2. பிரதிவாதிகள் தாக்கல்செய்த தப்பர்த்தமானமொழிப்பெயர்ப்புகளை வாதி ஆக்ஷேபிக்கவும், மாஜிஸ்திரேட்டார் கவனியாது அவைகளை சாக்ஷியதத்துக்கு ஆதாரவாகக்கொண்டதுபிசகு.

3. ஞானார்த்தங்களடங்கிய இராமலிங்க சுவாமிகளின் பாடல்களுக்கு மாஜிஸ்திரேட்டார் முழுதும் தவறான பொருள் கொண்டது பிசகு.

4. இறந்தவரின் உறவினருடைய மனதை புண்படுத்த வேண்டுமென்ற குற்றவாளிகளின் வெளிப்படையான எண்ணத்தைக் காட்டக்கூடிய ருஜூ ஏற்படவேண்டுமென்று மாஜிஸ்திரேட்டார் அபிப்பிராயப்பட்டது லாவுக்குவிரோதமாம். அதைக் குற்றவாளிகளின் நடவடிக்கையைக்கொண்டு யூகித்தறிய வேண்டியதவசியம்.

5. மாஜிஸ்திரேட்டார் இந்த கேசில் இங்கிலீஷ் லாவை உபயோகிப்பதா அல்லது இந்தியன்லாவை உபயோகிப்பதா என்பதை அறியாது மயங்கிவிட்டார்.

6. இது விஷயமாக நடைபெற்று வரும் இங்கிலீஷ் லா தீர்ப்புகள் முழுமைக்கும் மாறுபாடான தென ஒப்புக்கொள்ளத்தக்கதும், மேற்கோளாகாததுமான ஏகதேசமான, இங்கிலீஷ் கேசு ஒன்றில் காணப்படும் ஓர் வாக்கியத்தை ஆதாரவாகக்கொண்டு மாஜிஸ்திரேட்டார் தீர்ப்பு செய்திருப்பது பிசகு.

சென்னை, 1905-௵ ஏப்ரல்௴ 7௳ } (ஒப்பம்) ஜான் ஆடம் கவுன்செல்.

---

மேற்கண்ட இரண்டு ஜட்ஜுகளும் இந்துக்களானமையின் குற்றவாளிக விழைத்த தீங்கினளவையும், கீழ்க்கோர்ட்டார் செய்த தீர்ப்பினுபூலேயும் உணர்ந்து, இந்த கேசு ஹைகோர்ட்டு முன்பு விசாரிக்கத்தக்கதென கேசை கோர்ட்டில் தாக்கல் செய்து விசாரணைக்குக்கொண்டுவரும்படி தீர்மானஞ்செய்தார்கள்.

இரு கக்ஷிக்காரர்களும் தங்கள் தங்களுக்குண்டான ஆதாவுகளையெல்லாம் அச்சிட்டு விசாரணைக்கு சித்தப்படுத்தினார்கள். கட்டுகள் முழுவதும் அச்சான உடன்,

## ஹைகோர்ட்டார் விசாரணை.

1905-௵ நவம்பர்௴ 21௳ ஹைகோர்ட்டு ஜஸ்டிஸ் பென்ஸன் துரை, ஜஸ்டிஸ் மூர்துரையிவர்கள் முன்பு கேசுவிசாரணைக்கு வந்தது. அக்காலத்தில் முனனர் ஆக்டிங் ஜட்ஜியாயிருந்த வக்கீல் சங்கரநாயர் பாரிஸ்டர் ஆடம்துரை முதலான வக்கீல்கள் வாதியின் பக்கம் பேச ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது ஜஸ்டிஸ் மூர்துரை "இப்படிப்பட்ட மதசண்டைகளை மேலும் மேலும் விர்த்தியாகாமல் தடுப்பதுஉசிதமல்லவா வென உசாவினர்.

அதற்கு சங்கரநாயர் "உசிதந்தான், ஆயினும் இந்தகேசை விசாரியாவிட்டால் இது சம்பந்தமான சண்டைகள்விருத்தியாகும்என்றனர். எதிர் கக்ஷிவக்கீல் "அப்பீல் செய்யவேண்டியகாலத்திற்குள் இந்த கேசுக்கு மனுகொடுக்காத படியினால்

இந்த கேசை விசாரிக்கக்கூடாது" என வாதாடினார். அதைப் பற்றி ஜட்ஜிகள் கவலைகொள்ளவில்லை. (சங்கரநாயர் வாதிய பதற்கு உத்தரவு பெற்றிருந்தபோதிலும்,) குற்றவாளிகள் எழுதிய புத்தகம் அதிகாரிகளை பொருந்தியதென்றும், கீழ்க் கோர்ட்டார் ஆங்கிலதேசத்துச் சட்டப்படி தீர்மானித்தது பிசகு என்றும் எடுத்துக்காட்டினார். அதற்கு ஜஸ்டிஸ் பென்ஸன் துரை "அந் நூல் நிந்தனை பொருந்திய தல்லவென்று நாங்கள் சொல்ல வரவில்லை" என்றும், "குற்றவாளிகளை விசாரிக்க இந்தியன் பினல்கோட்டு என்னும் இந்திய சட்டமிருக்க இங்கிலீஷ் சட டம் எதுக்கு" என்றும் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். ஆயினும், வேறு சில காரணங்களால் இந்த கேசை விசாரிக்கலா மா விசாரிக்கக்கூடாதா வென்று யோசித்துக் கொண்டிருந்தார் கள். அதாவது "குற்றவாளி தண்டிக்கப்படுவானாயின், அவன் அப்பீல் செய்துக் கொள்ள ஹைகோர்ட்டு சட்டங்கள் இடங் கொடுக்கிறதே தவிர, குற்றம் சாட்டுபவர்க்கு கீழ்க்கோர்ட்டில் பிரதிகூலமானால், குற்றவாளியை தண்டிக்க மேலும் மேலும் பிர யத்தனஞ் செய்தால், அவ்வித அப்பீலுக்கு சாதாரணமாக இடங்கொடுப்பதில்லை." என்பதாம். பொதுஜன நன்மை உண்டெ ன்று விசாரிக்கும் ஜட்ஜிமனதிற்குப்பட்டாலொழிய கேசைபிடிப் பதில்லை. இவ்விதசட்டத்தை முன்னிட்டு "இந்த கேசுக்கு வாதி யார்" என்று ஜஸ்டிஸ் பென்ஸன் துரை கேட்டார். "நிந்திக்கப் பட்டவரின் தாயன் மகன் என்று எதிர் கக்ஷிவக்கீல் சொன் னார். உடனே கேசை முழுதும் விசாரிக்காமலும் இதில் பொது ஜன நன்மையுள்ளதென்று தெரிந்துகொள்ளாமலும்,

## கோர்ட்டார் தீர்ப்பு

"இந்தக் கேசை விசாரிக்கும்படி உத்தரவு செய்வதனால் யாதே னும் பொது நன்மை உண்டாமென நாங்கள் நினைக்கவில்லை. ஆகையால் நாங்கள் இதில் பிரவேசிக்க மாட்டோம்" என்று தீர் ப்பு சொன்னார்கள்.

இதனால் கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பு நியாயப்பட்டதென்று சொல்வதற்கு எள்ளளவேனும் இடமில்லை. கேசு விசாரிக்கப் பட்டிருப்பின் பிரதிவாதிகளுக்கு பிரதிகூலமாயிருக்குமென்று யிதைவாசிப்பவர்கள் உணர்ந்து கொள்ளலாம்.

சுவாமிகளின் சீடர்களாவது அல்லது அவரைப் பெரியோரெனப் பூசிப்பவர்களாவது கேசுஎடுத்திருப்பின்,கேஸிலபோது ஜன நன்மையில்லை யென்று சொல்வதற்கு ஹைகோர்ட்டாருக்கு இடமிருந்திருக்காது.

துவிதஜயம் பெற்றதாகக் கூறுங்குற்றவாளிகளுக்கு இன்னும்சங்கடம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். எவ்வாறெனில் வடிவேலுப்பிள்ளை மாத்திரந்தான் மறுபடியும் இப்புத்தக விஷயமாகக் கேசு எடுக்க முடியாது.

ஆயின் சுவாமிகளின்அபிமானிகள் கேசஎடுக்கத் தடையேயில்லை. மனம் நொந்தவர் அதற்காக பிரயத்தனம் செய்வதாகவும் தெரிகிறது.

குற்றஞ் செய்தவர்கள் தங்கள் குற்றத்தை பகிரங்கமாக ஒத்துக்கொள்வதை விட்டு முதல் ஜயம் இரண்டாவது ஜயம் என்று எங்கும் ஆரவாரித்துத் திரிகின்றார்கள். இதை எதிரிகள் எவ்வளவு காலந்தான் பொறுத்துக்கொண்டிருப்பார்கள்.

மாஜிஸ்திரேட்டு கோர்ட்டார் குற்றவாளிகளை தெண்டியாது விடுதலை,செய்தோமென்று சொன்னவுடனே, இவர்கள் "கானவன் வலையிற்பட்டு கைதப்பி ஓடுமான்போல்" ஓட்டம் பிடித்ததும் ஜயமாகுமா?

வடிவேலுப்பிள்ளை கொண்டுவந்தக் கேசு பொய்மையென்று அவர் தண்டிக்கப்பட்டிருப்பாராயின், இவர்கள பெற்றது ஜயமெனக் கொள்ளலாம்.

வடிவேலுப்பிள்ளை இந்த கேஸில் தமக்கும் கதிரையாருக்கும் விரோதமுண்டென ஓர் பொய்மைக் கூறியிருப்பாராயின், கதிரையார் கட்டாயம் தண்டிக்கப்பட்டிருப்பார்; அப்போது வடிவேலுப்பிள்ளை ஜயம் பெறறிருப்பார்.

ஆயினும் பொய்மைகூறிச் சூதுமார்க்கத்தால் ஜயிப்பது ஜயமாகாவாம். கேசு கெட்டாலும் இவர் சத்திய வழியில் நின்றொன்பதே ஜயமெனக்கொள்க.

கதிரைவேலுப்பிள்ளை விஷப்பரிகை செய்வது போலப் பலபோராலும், பூசிக்கப்பெற்றுள்ள இராமலிங்கசுவாமிகளின் மீது இல்லாத பழிபாபங்களைக் கற்பித்து அவதூறு செய்வதனால் அடைந்த பேறென்னை?

இந்த கேச முடிந்த ஒருவருஷத்திற்குள்ளாக,

வண்ணாரப்பேட்டையில் தேவாங்கசாதியாருள் பொய் சாக்ஷி சொன்ன சோதிடர் ஒருவர் தனது தள்ளாதவயதிற் காப்பாற்றக்கூடின இருபத்திரான்கு வயதுள்ள ஒரே பிள்ளையை திடீரெனப் பறிகொடுத்ததும், கதிரையார்தன்மகனைப்பறி கொடுத்ததும், பெண்டினைப் பறிகொடுத்ததும் மிகப்பரிதபிக் கத்தக்கதேயாம். இக்கதிரையார் நிலைமையிம்மட்டிலா நின்றது! இவர்க்குத்துணைப்பட்டாரையும் பற்றித்தொடர்கின்றதே! எங் ஙனமெனில், சென்னைசிந்தாத்திரிப்பேட்டையிலொருவர் தம்மக னிழந்ததும், காஞ்சிபுரத்தில் ஒருவர் தம்மகனிழந்ததும்,சிதம் பரத்தில் ஒருவர்தம்மகனிழந்ததும்,காஞ்சியிலுள்ளார் இருவர் கிரிமனல் கேசிலகப்பட்டு ஆயிரக்கணக்காகப் பொருளழந்த தும் அதிசயிக்கத்தக்கதேயாம். முன்னர் கதிரையார் காஞ்சி யில் இராமலிங்க சுவாமிகளைத தூஷித்த காலையில இவர்தமது உத்தரியத்திலதீப்பிடித்தெரிந்ததே. அம்மட்டில்லிலைாது சுவாமி களை மேலுமேலுந்தூஷித்துத் தாந்துன்பம்அடைவதோடு பிற ர்க்கும் பகிர்ந்து கொடுக்கின்றாரே!.கெடுமதி கண்ணுக்குத்தோ ற்றாதென்பது மிதுதானோ! இவரது ஏழைமதியிருந்தவாறென் னே! யென்னே! ஆச்சரியம்.

நண்பர்களே! இராமலிங்க சுவாமிகளிடத்தும் அவரால் ஆக்கப்பட்ட திருவருட்பா விடத்தும் உங்களுக்கு நல்ல அபிப பிராயம் இலலாவிட்டால் போற்றாது நீக்கிவிடுங்கள்.

நீவிர் எவரைப பெரியோரென மதிக்கின்றீர்களோ அவரை யும் அவரால் ஆக்கப்பட்ட நூல்களையுங் கடைப்பிடித்துய்மின் கள்.

அவ்வாறின்றி அஷ சுவாமிகளையும் திருவருட்பாவையும் நிமித்தமில்லாமலே தூஷித்துப் பழியைச் சுமப்பது பெரும்பா வமேயாம். அதனுல் கதிரையார் கூற்றை உண்மையாமென நம்பி மோசம் போகாது "நன்மைகடைப்பிடி" என்ற ஆப்தவாக் கியத்தை யுணர்ந்துய்வீர்களென திருவருளைச்சிந்திக்கின்றேம்.

சென்னை
20—9—1906.

சிவானந்த யோகிகளென்னும்,
முத்தமிழ்க் கவிபாரசு,
டாக்டர் தஞ்சை சண்முகம் பிள்ளை அவர்கள்
மாணவகர் தங்கவேலுப்பிள்ளை.

திருவருட்பாவை மருட்பாவெனக் கூறித்திரியும் சிலமருளர்கள் எமது ஆசிரியராகுரு சிவானந்த யோகிகளென்னும் டாக்டர், முத்தமிழ்க் கவியரசு தஞ்சை ஸ்ரீ சண்முகம்பிள்ளை யவர்களை வஞ்சித்துப், பொய்வழக்கு சிருட்டித்துச், சென்னை பிரசிடென்ஸி மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டில் தெண்டித்துவிடும்படி கேஸ்கொண்டுவந்தகாலத்தில், எமது புலவர் பெருமான் அவர்கள் திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சற்குரு இராமலிங்கசுவாமிகளிடத்து விண்ணப்பித்த,

# பதிகப் பாமாலைத் தோத்திரம்.

:O:

## துதி.

பரஞ்சுடராம் நால்வர்சிவ வருள்பெற்றோருங்கும்பார்த்தியனிராமலிங்கப்
பண்ணவன்றாட், பிரசமுறு பவர்க்கிசைத்த திருவருட்பா பெருநூலெல்லாம்
போல்வர்மன நாவினிக்குந். தரகொளநெயி ரினிக்கு தமுயிர்க் குயிரினிக்குந்
தனியுடல முழுதினிக்கு முண்மைஞான, வரங்கொள சுத்தசைவர்களுக்
கினிக்கு மோரா வனகணோ மசைவர்களுக் கினித்திடாதால்
வடலூரெந் தேசிகனே வள்ளலே மாவெளிவா முத்தனேயென்
உடல் பொருளாதியவெல்லாம் நீயென்றேநம்பி யுவந்திருக்கின்றேனுட்,
குடலெல்லாம் நடுங்கினேனே கொடியபொடி யாழ்ப்பாணர் குறிவழக்கைக்
கெடலென்னுந் தன்மையுறக் கேட்கின்றேனை கிருபைவைப்பாய் கெஞ்சி
னேனே. 1.

ஒருநெறியார் திருவருட்பா வடிவேங்களீடேற யுவந்தளித்தாய்,
பெருநெறியா ரிராமலிங்க வருட்டேசிகா வுதவேப் பிலடசசார்பாா,
செருநெறியா ரீழர்கள் பொருமையி னறை சிறிவழுவெடுத்தார் தீய்த்துக்,
கருநெறியாற் கெடுத்தவரை யொழித்தே தேற்றனிலைசடனுங் கருணைவாழ்வே.
வீண் வார்த்தை தூடணையு மெய்ப்பகட்டும் பசப்புமையு மேவத்தன்
னூண், சாண்வயிறு வளர்க்கவையோ மருளர்களை மயக்கித்தன சதிரைக்
காட்டி, ஆண்மையோடருட்பாவை யலர்தூற்றி யென்றனையு மலைக்கணித்
தார், கேண்மையிலா ரவர் முகமை யொடுக்க தெய்வ மாம்சற்குருவேகிருபை
வாழ்வே 3.

நால்வர்களாஞ் சமயமுதற் குரவர்களை நாங்கள் தூடணித்தோமென்
றே, மால்கொண்ட வெண்ணத்தால் மந்தமதிகளை மயக்கி மருட்பாவென்
னத், தால் தெறித்துப் புழுக்கவன்றோர் சாதித்து வழக்கெடுத்தார் சதிர்
கெடுத்து. மேல் வன்மாமருட்பாவைத் தூடணித்த வீணர்களை மெலிவிப்
பாயே 4

உற்றதுணை யிங்கில்லை னுனதுபயசரணமல் ருவந்தடைந்தேன், கற்ற
வர்நற்றுணையில்லேன் கலங்கினேன் பகைவர்களைக் கண்டிங்கந்தோ,முற்று
மௌனக்கைவிடாமுயற்சியுடன் காத்தளிப்பாய் மோனமார்ந்த,நற்றவவிரா
மலிங்க சற்குருவே நின்சரணம் நாடினேனே.

கோடியவரருட்பாவிற் கூறியவோர் நுண் பொருளின்குறிப்போராராய்ப்
படியினுக்குப் பெரும்பாரப்பண்புடையாரெனத் தோன்றிப்பந்நாளாக
வடியாதவசிலர் துதியருட்பாவையலர்தூற்றி யலக்கணித்தார், பொடிய
னேன் பயந்தீர்ப்பாய் புனித தவசற்குருவே போதவாழ்வே. 6.

கதியிழந்த பூலோக நணபனெனும் பத்திரத்திற் கண்கெட் டனனோர்
பதியிழந்த சிறுமியாபோற் குளறுபடை பலமொழிந்துபதடியானோர், துதி
யெழுந்த வருட்பாமேல் வழக்கெடுத்தங் கலர்தூற்றுந் தூய்மையென்னும்,
நிதியிழந்த பாவியரைக் கலங்கச்செய் சற்குருவேகதி நின்றாளே 7.

வண்டு மதுவருந்துதல்போ லருட்பாவை யடியரெலாம் வாழ்த்திப்பா
டிச, கண்டுகனி பசுவர்க்கம் படங்கமபோல் மாந்தியுளங் களிக்குநாளில்,
மிண்டுசெயுமீழததாபொறாமையினால் வீண்வழக்கங்கெடுத்துவநதார்,
தொண்டு செயுமடியனையுஞ் சற்குருவே வருத்தாது துணைசெய்வாயே. 8.

விலையுயர்நத வரதனத்தின வியன்குணததைக் குருடர்களும் விள்ளு
வாரோ, நிலையுயர்ந்த கதிரொளியைக் கூகையறியாததுபோல் நிமலமூற்
றக,கலையுயர்ந்தவருட்பாவைமருட்பாவென்றேயன்னோகதிகெட்டவையோ
தலை தறியானோர் வழக்கைக்கண்டயாந்தேன் சற்குருவேகடாக்ஷித்தாளே.9.

மலத்தையிச் சிகுமிழி கிரியென வேமாணபொருளை மருளாக்கொண்டு,
குலத்திற்கேற்கன கோலங்கொண்டழிந்த கெட்டவர்களகுணமார்மோன
நலத்திறமே ரருட்பாமேல வழக்கெடுத்த நாளிலெலை நலியச்செய்தே,
நிலத்திற்றோன்றினர் தோல்வியாகச்செய்தாய சற்குருவேநிமல வாழ்வே. 10.

---

* இந்நூலாசிரியரித்துதிப்பாவினைச்சொல்லி விண்ணப்பித்த எட்டாநாள் மேற்காட்டிய பத்திரிகை யொழிந்து விட்டது.

— பண்டிதமாமா ரஞ்சிதமாக இந்நூலெளிய நடையிலெழுதலாயிற்று.